www.tamilarangam.net




# பணம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




ஈழ நண்பர் கழக
மாத இதழ்

☐

மலர் 1
இதழ் 2

☐

ஜுலை-ஆகஸ்ட்
1986

☐

தனியிதழ் ரூ. 1.50
ஆண்டு சந்தா
ரூ இருபது

☐

தொடர்புகள்
அனைத்துக்கும் :
பாலம்
த.பெ.எண். 39
மதுரை 2

☐

ஆசிரியரும்
வெளியிடுபவரும்
இரா. திரவியம்

இனவெறி வன்முறைக்கு ஓர் அரசு ஓர் இராணுவம் ஒரு ஜனாதிபதி இவை உண்டென்றால் இலங்கை அரசும் சிங்கள இராணுவமும், ஜெய வர்த்தனாவும் சரியான உதாரணங்கள் ஆகும்.

1983 ஜுலை கலவரத்திற்கு முன்னும் சரி பின்னும் சரி தமிழர்கள் ஒவ்வொரு நாளும் கொல்லப்பட்டுக் கொண்டே இருக்கின்றனர்.

தமிழர் இனப் பிரச்சினைக்குத் தீர்வு எனும் பெயரில் எத்தனை எத்தனைப் பேச்சு வார்த்தைகள்?

கொழும்பு வட்ட மேசை மாநாடு, திம்புப் பேச்சு வார்த்தை ஆகியவை சமீபத்தில் நடை பெற்ற நாடகங்கள்.

மிக அண்மையில் இதே நாடக வரிசையில் கொழும்பில் அமிர்தலிங்கம் ஜெயவர்த்தனாவோடு பேச்சு வார்த்தை நடத்தினார்.

அமிர்தலிங்கம் ஜெயவர்த்தனாவுடன் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கும் முன் திருகோணமலை, மூதூர் பகுதியில் மணல் சேனை, பெருவெளி மல்லிகைத்தீவு பச்சனூர் ஆகிய இடங்களில் 67 தமிழ் அகதிகள் சிங்கள இராணுவத் தடியர்களால் கொலை செய்யப்பட்டனர்.

இவர்கள் பேச்சு வார்த்தையின் போதும் அடம்பனில் 50 பேருக்கு மேலும், வவுனியாவில் 20 பேருக்கு மேலும் தமிழர்கள் இராணுவ வெறியர்களால் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையிலும் பேச்சு வார்த்தையில் பங்கேற்றார் அமிர்தலிங்கம்.

திம்பு பேச்சு வார்த்தையின் போதும்; பேச்சு வார்த்தை நடந்த அதே சமயத்தில் தமிழர்கள் பகுதி மீது குண்டு வீசித் தமிழர்களைக் கொல்லும் நடவடிக்கையில் சிறிலங்கா அரசு ஈடுபட்ட போது திம்பு பேச்சு வார்த்தையிலிருந்து போராளிகள் வெளியேறினர்.

ஆனால் இப்போது பேச்சு வார்த்தையில் நின்று கொண்டிருப்பவர் அமிர்தலிங்கமாயிற்றே.

தமிழர்கள் கூட்டம் கூட்டமாகக் கொல்லப்படுகிறார்கள். அப்படியும் பேச்சு வார்த்தை தான்.

மேலிட ஆலோசனைக்கு சென்னைக்குத் திரும்பிய அமிர்தலிங்கம் நிருபர்கள் மத்தியில் ‘பேச்சு வார்த்தை ஒரு நுட்பமானக் கட்டத்தை எட்டியிருக்கிறது. எனவே மௌனமாக இருக்கிறேன்’ என்று கூறுகிறார்.

‘இது தான் இறுதி வாய்ப்பு இந்தப் பேச்சு வார்த்தையில் தீர்வு ஏற்படவில்லை என்றால் இராணுவத் தீர்வு தான் ஒரே வழி’ — இது ஜெயவர்த்தனாவின் கொக்கரிப்பு.

☐ மௌனத்தில் அமிர்தலிங்கம்
☐ மிரட்டல் ஒடுக்கு முறையில் ஜெயவர்த்தனா
☐ ஆனாலும் பேச்சு வார்த்தை தொடர்கதை

இந்தப் பேச்சு வார்த்தை மூலம் இழந்த செல்வாக்கைத் தேடிக் கொள்ள அமிர்தலிங்கமும், அவரது கூட்டணியினரும் முயலுகின்றனர்.

ஜெயவர்த்தனாவோ கடன் வழங்கும் மேலை நாடுகளின் நல்லெண்ணத்தைப் பெறவும், தமது கட்சியினரின் கோஷ்டிப் பூசலை தடுக்கவும், எதிர்க் கட்சியினரின் பிரச்சாரத்தை திசை திருப்பவும் பேச்சு வார்த்தை நாடகம் ஆடுகிறார்.

தமிழர் உயிர்களைக் குடித்துக் கொண்டே ‘பேச்சு வார்த்தை நாடக’மாடும் இலங்கை இனவெறி அரசின் உள் நோக்கத்தைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

ஈழ விடுதலைக்கு ஆர்வமும் ஆதரவுமாய் செயல்படுகிற நாம் தமிழக மக்களுக்கு உண்மையை புரிய வைப்பது அவசியம். அவர்கள் விழிப்புடன் செயல்பட உறுதுணையாக இருப்போம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாலம்

## வெளியீட்டு விழா

ஈழநண்பர் கழகம், ஈழ விடுதலைக்கு ஓர் ஆதரவு சக்தி. ஈழ மக்களுக்கும் இந்திய மக்களுக்கும் இடையே நிலவும் கலாச்சார உறவுகளை, இலக்கியச் செழுமைகளை வலுப்படுத்தும் பாலம் தான் ஈழ நண்பர் கழகத்தின் 'பாலம்' மாத இதழ்.

பாலம் மாத இதழின் வெளியீட்டு விழாக்கள் சென்னை கோவை, திருச்சி ஆகிய முப்பெரும் நகரங்களிலும் நடைபெற்றது.

□□ சென்னையில் மே 23ஆம் தேதி நடைபெற்ற பாலம் வெளியீட்டு விழாவிற்கு கே. எம். வேணுகோபால் தலைமை ஏற்றார். அவரே முதல் இதழை வெளியிட 'பிளேஸ் பிரிண்டர்ஸ்' ரமணி பெற்றுக் கொண்டார்.

விழாவில் எழுத்தாளர் பாலகுமாரன், கவிஞர் இளவேனில் பேராசிரியர் பெரியார்தாசன் தோழர் சுந்தர் ஆகியோர் விமர்சன உரை ஆற்றினர்.

'எங்கள் மண்ணும் இந்த நாட்களும்' எனும் கவிதா நிகழ்வு தமிழகத்தில் முதல் முறையாக நிகழ்த்தப்பட்டது. ஈழத்துக்கலைஞர்கள் இளவாலை விஜயேந்திரன் அருட்குமரன் செல்வி சித்ரா ஆகியோர் கவிதா நிகழ்வில் பங்கேற்றனர்.

தமிழ்க்கவிதைக்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுக்கப் போகும் இந்த கவிதா நிகழ்வு அனைவரையும் ஈர்த்தது.

□□ திருச்சிமாவட்ட ஈழ நண்பர் கழகத்தின் சார்பில் கடந்த 01-06-1986 ஞாயிறு அன்று திருச்சியில் 'பாலம் மாத இதழ் வெளியீட்டுவிழா' நடைபெற்றது.

பேராசிரியர் பே. க. வேலாயுதம் விழாவிற்கு தலைமையேற்றார். வருகை தந்த அனைவரையும் திரு. செல்லப்பன் வரவேற்றார். பாலம் இதழை திரு. அன்பழகன் வெளியிட அதை பேராசிரியர் சண்முக சுந்தரம் பெற்றுக்கொண்டார். பேராசிரியர் கு. திருமாறன், புலவர்கள் சேந்தமாங்குடியார், சுப்பிரமணியன், தோழர்கள் திரவியம் (EFOS), பத்மன், வளவன், முகிலன் (EROS). செல்வி அவையரசி, முக்கனி, செங்குளம் காலணி மற்றும் சுற்றுலா மாளிகை காலனி பொறுப்பாளர்கள் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

இதில் பேசியவர்கள், பாலம் இதழின் சிறப்பைப் பற்றியும், தமிழக-ஈழ உறவை வலுப்படுத்தும் பாலமாக வெளிவருவதைப் பற்றியும், குறிப்பாக பாலம் இதழில் தோழர் பாலகுமாரன் பேட்டி தமிழக மக்களுக்கு ஈழப் போராட்டம் பற்றிய தெளிவான கருத்தைக் கொடுத்ததோடு 'ஆகாவென்று எழுந்தது பார் மலையக மக்களின் எழுச்சி'' என்ற கட்டுரை 'ஈழப் போராட்டத்தின் முதுகெலும்பு மலையகமே' என்பதை விளக்கியது. மேலும் பாலம் இதழானது தமிழக மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் மார்க்சிய கருத்துகளை எளிமையாக்கி வெளிப்படுத்தியதையும், பாலம் இதழின் ஒவ்வொரு பக்கங்களும் மிகத் தெளிவான கருத்துக்களை தாங்கி வந்ததையும் மேலும் பாலம் இதழ் சிறப்பாக இருக்க உலக நாடுகளில் தங்கள் உரிமைகளுக்காக போராடும் மக்களின் இடிமுழக்கமாக வெளிவர வேண்டும் என வாழ்த்தினார்கள். தோழர் சுந்தரம் நன்றி கூறினார்.

□□ கோவையில் ஈழ நண்பர் கழகத்தின் சார்பில் 29.5.86 பாலம் வெளியீட்டு விழா நடைபெற்றது.

பாலம் இதழை திராவிட முன்னேற்றக்கழக சட்ட மன்ற உறுப்பினர் திரு மு. இராமநாதன் வெளியிட 'மாருதி ப்ராடக்ட்ஸ்' திரு ம. தேவராஜ் பெற்றுக் கொண்டார்.


விழாவில் இராமராஜ் (ஜனதா) வழக்குரைஞர் வீ. வரதராஜ், வழக்குரைஞர் ச. கோவிந்தராஜ் (தி.மு.க.) அ. மாணிக்கம் (திராவிடர் கழகம்) மு. பாலன் (ஈழ நண்பர் கழகம்) ஈழநண்பர் கழக மாநிலத்தலைவர் இரா. திரவியம் ஆகியோர் சொற்பொழிவு ஆற்றினர்.

□ ஈழப் போராட்டத்தில் மறக்க முடியாத 83 - ஆம் ஆண்டு ஜூலை படுகொலையின் மூன்றாம் ஆண்டு நினைவு நாள். மௌன

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





முதல் இதழை மு. இராமநாதன் வெளியிடுகிருர்

ஊர்வலத்தையும்' பொதுக் கூட்டத்தையும், திருச்சியில் ஈழ நண்பர் கழகமும், ஈழ அகதிகள் முன்னணியும் நடத்தின. தமிழக - ஈழ மக்கள் அடங்கிய மௌன ஊர் வலம் திருச்சி கொட்டப்பட்டு அகதிகள் முகாமிலிருந்து புறப் பட்டு தேவர் மன்றத்தை சென்றடைந்தது.

திருச்சி தேவர் மன்றத் தில் பொதுக் கூட்டம் நடை பெற்றது. திருமதி. பத்ம நாபன் (ஈழ அகதிகள் முன் னணி) கூட்டத்திற்கு தலைமை தாங்கினர். தோழர் சுந்தரம் (EFOS) அனைவரையும் வர வேற்று பேசினர். தோழர்கள் பத்மன், முகிலன் (EROS), நிமால் (PLOT) பேராசிரியர் கள் கு. திருமாறன், சண்முக சுந்தரம், தோழர் மணிவண் ணன், செல்வி அவையரசி, செல்வி முக்கனி, (EFOS), செல்வி ஜெகா (ஈழ அகதிகள் முன்னணி) ஆகியோர் சிறப் புரை நிகழ்த்தினர். முடிவில் புலவர் சந்திரசேகரன் அனை வருக்கும் நன்றி கூறினர்.

## சென்னை 'பாலம்' விழா பற்றி சுயம்புலிங்கம்

மே மாசத்து வெயில் அடங் கிய ஒரு வெள்ளிக் கிழமையின் முன்னிரவு. புழுக்கம் நிறைந்த ஒரு அழுக்கு மண்டபம். இரண்டு இளைஞர்களும் ஒரு பெண்ணும் ஒஞ்சலியாய் ஆர்வ மாய் தங்கள் தேசத்து மக்க ளின் துயரத்தைச் சொல்வதற் கென்றே பிறப்பெடுத்தவர்கள் போல் கம்பீரமாய் மேடைக்கு வருகிருர்கள். தேர்ந்தெடுத்த கவிதைகளின் இயல்பான பிசிறு இல்லாத துடியான உச் சரிப்பு மண்டபத்தை நீடித்த நிசப்தத்தில் தன் பிடிக்குள் அமர்த்துகிறது.

புதுக்கவிதையை மனசி லாக்க முடியும். மக்களிடம் எடுத்துச் சொல்லலாம். இசைக் கருவிகளையும் புதுக்கவிதை களோடு உடன்படச் செய்ய முடியும் என்கிற நிச்சயத்தை அவர்கள் உறுதி செய்தார்கள்.

பாலம் குறுகிய காலத்தில் தயாரிக்கப்பட்டது. தேவை கருதி கொண்டு வரப்பட்டது. பாலம் எளிமையாக இல்லாமல் போனலும் உறுதியாக இருக் கும் என்கிற வாக்கு முன் மொழியப்பட்டது. ஈழம் எளி மையாக இல்லை. பாலம் எளி மையாக இருக்க முடியாது. ஈழத்து மக்கள் பேரில் விசு வாசம் வைத்து ஈழத்தை ஆர் வத்தோடு அறிந்து கொள்ள விரும்புகிறவர்கள் பாலத்தைப் புரிந்து கொள்ள முடியும் என்று உரத்த குரலில் பேசப்பட்டது. பாரதி செய்த ஒரு பெரும் துரோகத்துக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இலங்கை சிங்களர்த் தீவு என்று ஈழத்தை சிங்களரிடம் ஒப்படைக்கிருர் பாரதி. இலங்கை சிங்களர் தீவு அல்ல. வரலாற்றுக்கு முற்பட்ட பாழடைந்த கற் காலத்திலேயே ஈழ மண்ணில் தமிழன் பிறந்தான். ஈழத் தமிழனின் தாயகம் ஈழம்.

ஈழத்துக் கவிதைகளில் கஷ் டங்களும் துயரங்களும் மட் டுமே தொனிக்கிறது. இலங் கையில் அவலம் நிகழ்கிறது என்பது வாஸ்தவம். போராட் டத்தில் மக்கள் சகலத்தையும் இழந்து விட்டார்கள் என்பது முற்றும் சரி அல்ல. மக்கள் இழக்காதவைகளும் எவை எவையோ இருக்கின்றன. தங்கள் தாயகத்தை விட்டு சொந்த மனிதர்களைப் பிரிந்து நிர்ப்பந்தமாய் வெளியேற வேண்டிய கதிக்கு ஆளான அவலத்தை அழுது அழுது புலம்பாமல் நேர்மையான ஒரு போராளியின் திண்மையான உறுதிப் பாட்டோடு உலகம் எங்களைக் கண்டு பயப் படு கிறது என்கிற ரீதியில் கவிதை பேச வேண்டும். போராடிப் பெறுகிற சமூகம் எப்படி இருக் கும் என்பதை கவிஞன் தீர்க்க தரிசனத்தோடு நாட்டின் ஆன் மாவைப் பேச வேண்டும்.

சுயம்புலிங்கம். 13 பார்த்த சாரதி தெரு, சாலிக் கிராமம், 600 093. □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்னையின் பரபரப்பு மிக்கச் சூழ்நிலை. ஜூன் வெயில் தன் வெப்பத்தைப் பரப்ப காற்று தன் இயல்பில் மாறியது.

ஆனாலும் புதிய ரத்தம் புதிய வேகம் சூழ ஆயிரக்கணக்கான மாணவர்கள் வாலிபக் குறும்புகளையும் கல்லூரி கனவுகளையும் ஒதுக்கிவைத்து விட்டு சமூக பிரக்ஞையோடு ஈழவிடுதலைப் போர் வெல்க, ஜே. ஆர். ஜெயவர்த்தன - அமெரிக்கக் கூட்டுச் சதி ஒழிக, ஈழம் எமது தாயகம் என்ற கோஷங்களில் அவர்கள் புதைந்து போகிறார்கள். வெளி நாடுகளில் இருந்து வந்த நூற்றுக் கணக்கான மாணவ மாணவிகள் ஊர்வலத்தில் பங்கேற்கின்றனர்.

சாலை இருபுறங்களிலும் சென்னை நகர மக்களின் புருவம் வியப்பால் உயர்கிறது.

இப்படி ஒரு சம்பவம் நடப்பது தங்கள் கவனத்திலிருந்து தப்பிப் போனது எப்படி? மீண்டும் ஞாபகமாக சுவர்களைப் பார்க்கிறார்கள். 'Asian student solidarity week with Eellam' 'ஈழ விடுதலை நோக்கி' என்றும் சிறிய அளவில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

உலகின் கவனத்தை ஈழ விடுதலையில் ஒருமுகப்படுத்தும் சர்வதேச மாணவர் மாநாடு ஆர்ப்பாட்டமின்றி ஜூன் மாதம் 24 தேதி முதல் ஜூலை 28 தேதி வரை நடைபெற்றது. 28-ஆம் தேதி காலையில் தான் பச்சையப்பன் கல்லூரியிலிருந்து தமிழக அரசின் தலைமைச் செயலகம் உள்ள கோட்டை நோக்கி இந்த ஊர்வலம் நடைபெற்றது.

## ஆசியமாணவர்ஒன்றியம்

□

## மாணவர் இளைஞர் பொது மன்றம்

மாநாட்டில் பிலிப்பைன்ஸ், பாலஸ்தீனம், சிங்கப்பூர் ஹாங்ஹாங் ஆஸ்திரேலியா கிழக்குத் திமோர், வங்க தேசம், மேற்கு ஜெர்மன், நேப்பாளம் நியூஸிலாந்து ஈரான் ஆகிய நாடுகளிலிருந்தும், ஈழத்திலிருந்தும் பிரதிநிதிகள் வருகை தந்திருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு, தமிழீழ மாணவர் பேரவை, ஈழப் புரட்சி அமைப்பின் மாணவர் அமைப்பான மாணவர் இளைஞர் பொது மன்றம், ஆகிய ஈழ விடுதலை அமைப்புகளின் மாணவர் பிரிவுகளும் பங்கேற்றன.

மேற்குஜெர்மனி, டென்மார்க், பிரான்ஸ், இலண்டன் ஆகிய வெளி நாடுகளிலிருந்து மாணவர் இளைஞர் பொது மன்றத்தைச் சார்ந்த பிரதிநிதிகளும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் ஆகிய கட்சிகளின் மாணவர் பிரிவுகள், ஈழ நண்பர்கழகம் உள்ளிட்டு பல்வேறு இந்திய அமைப்புகளும் மாநாட்டில் பங்கேற்றன.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளும் அவர்களின் போராட்டமும் ஓர் ஆய்வு எனும் தலைப்பில் ஆய்வுரையை சுந்தர் வழங்கினார்.

'தேசிய கல்வியின் வளர்ச்சியும் மலையகத் தொழிலாளர்களுக்கு அது பயன்படாமையும்' எனும் தலைப்பில் ஒரு ஆய்வு கட்டுரையும் காலனிய கல்வி முறை எனும் தலைப்பில் ஆய்வுகட்டுரையை மாணவர் இளைஞர் பொது மன்றமும், ஸ்ரீலங்காவில் தற்போதைய பிரச்சினையின் வளர்ச்சி எனும் தலைப்பில் ஒரு ஆய்வுக் கட்டுரையும், கல்விமுறையில் இன வொதுக்கல் எனும் தலைப்பில் ஒரு ஆய்வுக் கட்டுரையும் மாநாட்டில் சமர்ப்பிக்கப் பட்டது.

தனியாக ஆய்வரங்கு ஒன்றும் நடைபெற்றது.

ஆய்வரங்கில் ஸ்ரீலங்காவில் 'மனித உரிமைகளுக்கு எதிரான வன்முறை' எனும் தலைப்பில் இராஜனும், ஈழ விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு எனும் தலைப்பில் மகேஸ்வரியும், வகுப்பு வாதமும் தொல்லியலும் என்னும் தலைப்பில் டாக்டர் ரகுபதியும், ஈழத்தின், கல்வி மற்றும் பொருளாதாரப் பிரச்சினை எனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களும் ஆய்வுரை வழங்கினர்.

ஜூலை 3ஆம் தேதி கலாச்சார இரவு நடைபெற்றது.

ஈழத்தின் மாணவர் இளைஞர் பொது மன்றத்தின் சார்பில் தமிழில் இரு நாடகங்களும், தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் சார்பில் ஆங்கிலத்தில் ஒரு நாடகமும்

# ஈழப் பிரச்சினையில் உலகம் விழித்திட

# சர்வதேச மாணவர் இளைஞர் மாநாடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பரத நாட்டிய நிகழ்ச்சி ஒன்றும், தமிழீழ மாணவர் பேரவை சார்பில் ஒரு ஆங்கில நாடகமும், வில்லுப் பாட்டும் நடைபெற்றன.

பாலஸ்தீன மாணவர்களின் எழுச்சிமிக்க நாடகமும், நாட்டியமும் நடைபெற்றது.

வெளிநாட்டு மாணவர் பிரதிநிதிகள் தமிழகத்தில் உள்ள பல்வேறு அகதிகள் முகாமுக்கு நேரில் சென்று ஈழத்தமிழ் மக்களின் நிலைமைகளை கண்டறிந்தனர்.

மாநாட்டில் சிறப்பு நிகழ்ச்சியாக ஈழ விடுதலை இயக்கங்களின் தலைவர்கள் இரத்தின சபாபதி (ஈழப்புரட்சி அமைப்பு) பாலகுமார் (ஈழப் புரட்சி அமைப்பு,) உமா மகேஸ்வரன் (தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்,) திலகர் (தமிழீழ ஈழ விடுதலை புலிகள் இயக்கம்) செல்வம் (தமிழீழ விடுதலை இயக்கம்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆசிய மாணவர் ஒன்றியமும் ஈழப் புரட்சி அமைப்பின் மாணவர் அமைப்பான மாணவர் இளைஞர் பொது மன்றமும் 'ஈழவிடுதலை நோக்கிய'... இந்த சர்வ தேச மாணவர் மாநாட்டை ஏற்பாடு செய்து சிறப்புற நடத்தின.

உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மாணவர் பிரதிநிதிகள் ஈழப் பிரச்சினையின் ஆழத்தையும் ஈழ விடுதலைப் பற்றிய அவசியத்தையும் உணர்ந்தவர்களாய் இருந்ததை அவர்களோடு பேசும் போது விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

மாநாட்டின் இறுதியில் வெளியிடப் பட்ட பிரகடனத்தில் இவர்கள் அனைவரும் கையொப்பம் இட்டிருப்பதே இதற்கு சாட்சியமாகும். □

# நண்பர்களே தோழர்களே

பாலம் இந்த இதழ் முதல் 'நட்புறவு பாலம்' ஆகிறது.

இதழுக்கு அரசின் பதிவு கிடைத்து விட்டது. இனித் தாமதம் தவிர்க்கப்படும். உரிய காலத்தில் வெளிவரும்.

□ இதழ் பற்றிய விமர்சனங்கள், படைப்புக்கள் ஆகியவற்றை உடனடியாக அனுப்பி வையுங்கள்.

□ இந்த இதழ் உங்களுடைய இதழ். உங்களுடைய உடைமை. எனவே உங்களுடைய உடைமையை எப்படி பாதுகாப்பது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

□ சந்தா, நன்கொடைகளை குவிக்க வேண்டியது உங்கள் பொறுப்பு.

□ உங்கள் ஊரில் பாலம் இதழை விற்பனைக்கு உரிய ஏற்பாடு செய்ய வேண்டியதும் அவசியம்.

□ அடிக்கடி பாலம் வாசகர் கூட்டங்களை ஈழ நண்பர் கழகம் மூலம் நடத்த ஏற்பாடு செய்தல் நல்லது.

□ ஊர்கள் தோறும் ஈழநண்பர் கழகமும், பாலம் இதழும் பொலிவோடு திகழ உழைக்க வேண்டியது நீங்கள் தான்.

ஈழ நண்பர் கழகச் செய்திகளைப் பிரசுரிப்பதற்கென்றால் தெளிவாக ஒரு பக்கத்தில் மட்டும் எழுதி அனுப்புங்கள்.

அன்புடன் ஆசிரியர்குழு

□

# தோழர் சேகுவரா

இலத்தின் அமெரிக்க நாடுகளில் இந்தப் பெயர் இடி முழக்கமாய் எழுந்தது.

இந்தப் பெயர் அமெரிக்க ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் நெஞ்சங்களில் எல்லாம் பயப்பிராந்தியை பற்றி எரிய வைத்தது.

சாதாரண எளிய வாழ்க்கை வாழ்ந்த உழைப்பாளர்களுக்கு நம்பிக்கையாய், தைரியமாய் ஸ்தாபனமாய், போராடும் படையணியாய் அந்தப் பெயர் வட்டமிட்டது.

*சேகுவரா*

ஓ அந்தப்பெயரின் எழுச்சி வரி வடிவம் தான் இது.

இது மகானின் புனிதப் பெயர் அல்ல— மாவீரனின் மக்கள் திரளின் ரத்தமும் சதையுமானப் பெயர்.

அவருடைய வாழ்க்கையில் நொடிக்கு நொடிக்கு நிகழ்ந்த திருப்பங்கள்—சம்பவங்கள் மக்களுக்கான அர்ப்பணிப்பு ஆகியவவை சுவை பட, அடுத்த இதழ் முதல் வெளி வருகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாய்நாடு எனும் தொட்டில் பறிபோனபோது

□ ரசூல்கம்சதோவ் □

இதுவரை கிழக்கு அரேபியாவிற்கு பல முறை சென்றிருக்கிறேன்; ஒவ்வொரு தடவையும் மனதில் புதுப்புது எண்ணங்கள் திரள திரும்புவேன்; ஆனால் 'அந்த எண்ணங்கள்' இப்போது முக்கியமல்ல; அந்தப் அரபுநாடுகளை விடாது கவ்வியிருக்கும் கனத்த சோகத்திற்கு அவை எந்தவிதத்திலும் பாடம் கற்பிக்க முடியாது.

''ஆ, துப்பாக்கிச் சத்தம்! அங்கே ஏதோ ஆபத்து!''

நான் டாமஸ்கஸ்ஸிற்கு சென்று கொண்டிருந்தபோது, ஒரு சிரியன் மாணவன் இப்படி ஆ! ஆ! என்று கிலிகொண்டு கத்தியபடி தன் சக மாணவர்களோடு வீட்டை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான்; பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

இந்த நேரத்தில், எனக்கு நான் பிறந்த ஸ்தலமான டாகெஸ்தானின் ஞாபகம்தான் வருகிறது; அங்கே 'அகுல் கோக்' என்றொரு மலை; மக்களனைவருக்கும் அது பீதியைத் தருவதாக இருந்தது; ஏனென்றால் சண்டைகள் அங்கேதான் அடிக்கடி நடக்கும்.

அந்த மலையை நோக்கி எதிரிகள் முன்னேறும்போது அதிலிருந்து தீப்பந்தங்கள் மேலுயர்ந்து 'எச்சரிக்கை' விடுக்கப்படும். மக்களும் உடனே பந்தோபஸ்து தேடி ஓடுவார்கள்.

இன்று உலகின் பயம், பீதி கலந்த பார்வைகள் யாவும் மத்தியக் கிழக்கு நாடுகளின்மேல் படிந்துள்ள நிலைமையில், இந்நாடுகளை அந்த 'அகுல் கோக்' மலைக்கு நாம் ஒப்பிடலாம் அல்லவா!

இந்த காலத்தில் எது நடந்தாலும், எங்கே இடி அதிர்ந்தாலும் மழை எல்லோரின் தலைகளிலும் பெய்கிறது; இயற்கையின் சீற்றத்தால்தான் இப்படி நேர்கிறது என்பதில்லை. பல வருஷமாய் எழுப்பப்படும் யுத்த இடிகளின் பேரிரைச்சல்களும், செத்து விழுவோரின் ஓலங்களும்கூட இதற்கு காரணங்களாக இருக்கலாம்.

என் வரையில் உலகின் மத்திய கிழக்கு நாடுகள்தாம் என்னில் சீழ் வடியும் புண்ணை உறுத்திக் கொண்டிருக்கிறது.

அந்த நாடுகளில் நான் செய்த ஒவ்வொரு பிரயாணத்தைப் பற்றியும் நீண்ட கதையாக என்னால் சொல்ல முடியும்; ஆனால் இப்போது சொல்லப் போவதெல்லாம், எக்கணமும் என் ஆத்மாவை இம்சிக்கும் நினைவுகளைப்பற்றியே.

ஜப்பானின் ஹிரோஷிமாவில் என் நெஞ்செரித்த நிகழ்ச்சி நடந்தேறியதை நான் பார்த்தேன்; ஆனால் ''எல் குனெய்த்ரா'' நகரம் ரத்தத்தில் மிதந்தபோது, சிரியா தேசத்தவரின் மரண ஓலங்கள் நினைவில் அந்த நிகழ்ச்சியை மீண்டும் ஞாபகப்படுத்தும் என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

1973-ல் தான் நடந்தது அது; அந்த ரம்யமான நகரம் இஸ்ரேல் கட்டவிழ்த்துவிட்ட திடீர் போரால் தரை மட்டமானது; வீடுகள் மட்டுமல்ல; கல்லறைகள், மசூதிகள், சர்ச்சுகள் யாவும் இடித்துத் தள்ளப்பட்டன;

அதன்பின் 'ஜோர்டான்நதி' புனித நீர் நிரம்பியது எனவும் எந்தப் பாவத்தையும் அதில் கழுவுக்கொள்வோம் என்றும் இஸ்ரேலியர்கள் சொல்லிக் கொண்டார்கள்.

ஆனால், அட்டூழியங்கள் பல புரிந்து, பாலஸ்தீனர்களின் நிலங்களை அபகரிக்கும் ஆக்கிரமிப்பு வெறியை கழுவிக்கொள்ள அவர்களின் நதியில் போதுமான நீரில்லையா என்ன! பாலஸ்தீனர்களை அவர்களின் சொந்த தாயகத்திலிருந்து விரட்டியடித்தார்களே! அந்த நிலங்களை இப்போது யார் வைத்துக்கொள்ளப் போகிறார்களாம்.

www.tamilarangam.net



பெய்ரூட் நகரமே! என்னை மன்னித்துவிடு; முன்னைப்போல் கிழக்கிலேயே மிகவும் வசீகர மிக்க நகரமாய் உன்னை இப்போது என்னால் அங்கீகரிக்க முடியாது.

நாம் சந்திக்காமல் இருந்த இந்த இடைப் பட்ட வருஷங்களில் என்ன நேர்ந்தது உனக்கு?

உனது சௌகரியம் நிலவிய ஸ்தலங் களனைத்தும் சூறையாடப்பட்டுக் கிடக்கின்றன; உனது மகத்தான வசிப்பிடங்களனைத்தும் பாழ் படுத்தப்பட்டுள்ளன;

முன்னொரு சமயம், ஆசிய - ஆப்பிரிக்க கவிஞர்களெல்லாம் ஒன்றுகூடி, உன்னிடத்தில் புரட்சிக் கவிதைகள் படித்தபோதிருந்த நிலை மையை, லெபனானின் அழகு கலைசொட்டும் தலைநகராக விளங்கிய பெருமையை நிச்சயம் நீ திரும்பப் பெற முடியாது.

எப்போதும் பீதி, பயம், குழப்பம் யாவும் நிறைந்த, பகைமை உணர்வால் கூறுபட்டுப் போன, ஒரு நகரமாகத்தான் உன்னை இன்று என்னால் பார்க்க முடிகிறது.

பூமியை நிலைகுலையச் செய்யும் சூறைக் காற்றைப் போல் ராட்சஸத்தனமான தாக்கு தல்களை நடத்தும் இஸ்ரேலியர்களால் உன் அழகின் அற்புதங்களனைத்தும் துடைத்தெறியப் பட்டுவிட்டன.

அன்று நான் லெபனானில் பாலஸ்தீனர் களின் அகதிகள் முகாமில் தங்கியிருந்தேன் அங்கிருந்த ஆண்-பெண் . அனைவர் முகங்களி லும், தாளமுடியாத சோகம்; தார்மீக கோபம்; கண்ணீர்; அனைத்தும் அகற்ற முடியாத பளபளப் போடு தேங்கியிருந்தன.

அவர்களில் பலர், பெற்றோர்களை சொந்த சகோதரர்களை சகோதரிகளை, குழந்தைகளை 'இழந்தவர்கள்'. இவையெல்லாம் ஆழ்ந்த வருத்தத்தை அளிக்கிற மீட்டுத்தர முடியாத இழப்புகள்தாம்;

ஆனால் ஒருவனின் தாய்நாடு பறிபோனதை எந்த இழப்புக்கு நிகராக சொல்ல முடியும்? அது சகிக்க முடியாத ஒன்று; தனித்துவிடப் பட்ட அவனின் ஆவேச உணர்ச்சி அவனுள் நீண்ட காலம் அடங்கியிருக்காது.

ஒருவனின் தாய்நாடு என்பதை பூமி, செடி கொடிகள், பூக்கள், நதிகள் என்றெல்லாம் இலகுவாக சொல்லி விளக்கிவிட முடியாது; அது அவனுக்கு ரத்தமும் சதையும் போல்; இதய மும் ஆத்மாவும் போல்.

என் குழந்தைப் பருவ நாட்களில், டாகெஸ்தான் மலைப் பகுதிகளில் தண்டனையின் மிகக் கொடூரமான வடிவமொன்று வழக்கில் இருந்தது; தண்டனை இப்படித்தான்:

தாயிடமிருந்து குழந்தை உறங்கும் தொட்டிலை பிடுங்கிக் கொண்டு சென்றுவிடு வார்கள்; குழந்தையோ தொட்டிலின்றி தூங் காது; அழும், கதறி கதறி.

இன்று என் தாய் நாடான ரஷ்யாவை விட்டுப் பிரிந்து வாழும் சொற்பகால வாசத் தின் போதும்கூட என்னால் சரிவர தூங்க முடிவதில்லை.

ஆனால் தாய்நாடு எனும் தொட்டிலே பறி போன நிலையில் பரிதவிக்கும் மக்களைப்பற்றி என்ன சொல்லலாம்?

சிரியா தேசத்தவர் தங்கள் பூர்வீக நாட்டின் ஒரு பகுதியான 'கோலன் குன்றை' பறி கொடுத்தப் பின்னாலும், பல்லாயிரக் கணக் கான அகதிகள் அவர்களது சொந்த வீடுகளின் வாசலைக்கூட காண முடியாமல் இருக்கிறச் சூழ்நிலையிலும், அவர்கள் மௌனத்துள் மூழ்கிப் போவார்களா? வாய்மூடி வாழ்ந்து முடிப்பார் களா? அப்படியானால் அதைவிட எதிர்காலத் திற்கு எதிரான அநியாயச் செயல் வேறென்ன இருக்க முடியும்!

நெரிசல் மிகுந்த பாலஸ்தீனர்களது மருத் துவமனை ஒன்றில் இஸ்ரேலியர்களின் தொடர்ச்சியான குண்டுவீச்சுகளால் பாதிக்கப் பட்டவர்கள் அனுமதிக்கப் பட்டிருந்தார்கள்.

அங்கிருந்த ஒருவரிடம் ''இப்போது எப் படி உணர்கிறீர்கள்'' என்று நலம் விசாரித் தேன்; வலியால் துடித்துக் கொண்டிருந்த போதிலும் அவர் உறுதியுடன் பேசினார்.

''குதிரையை இழந்த யாரும் சாட்டையை நினைத்து அழமாட்டார்கள்; சக மனிதர்கள் படுகிற அவஸ்தைக்கு முன்னால் என் தேக வலி ஒரு அற்ப விஷயம்; அலங்கோலமாகிக் கிடக் கும் மொத்த பாலஸ்தீனத்திற்கும் முன்னால் எனது ரத்தக்காயங்கள் வெகு சாதாரண மானவையே! ஒருகால், இப்படியே புது உதயத்தை காணாமலேயே நான் இறந்து போகலாம் ஆனால் விடுதலைச் சூரியன் விரை வில் என் தாய்த்திரு நாட்டில் எழுவான்; ஒளி பரப்புவான்'' என்ற வார்த்தைகளால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர் தன் தேசப்பற்றின் உச்சத்தை காட்டினார்.

நான் தங்கின பாலஸ்தீனரது முகாமொன்றில் நிறைய குழந்தைகள் இருந்தார்கள்; பாவம், நடந்து முடிந்த போர்களில் அவர்களின் பெற்றோர்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள். அந்த அனாதைக் குழந்தைகளுக்கு அங்கு அமைக்கப்பட்ட பள்ளி ஒன்றில் சித்திரப் பயிற்சி அளிக்கப்படுவதை நான் பார்த்தேன்.
முகாமில் இருந்த பலருக்கு, அவர்களின் உறவினர்களது முகங்களைக் கூட அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை; ஆனால் அந்த 'குழந்தை - ஓவியர்கள்' தூரிகைகளால் தடவி தடவிச் சரியாக முகம் கண்டுப் பிடித்தார்கள்; மேலும் வாழ்நாளில் பார்த்தேயிராத தங்களின் ஜென்ம பூமியை அவர்களது கற்பனை ஒவியங்களால் காட்சியளிக்கச் செய்தார்கள்.

இரக்கமற்ற வாஷிங்டனின் யுத்த வெறியர்கள், பெற்றோர்களையும், தாய் நாட்டையும் இழந்து வெறும் மனிதப் பிறவிகளாய் உழல்கின்ற, ஒரு பாவமும் அறியாத இந்தக் குழந்தைகளின் கண்களால் உலகத்தை நோக்க துணிவார்களா!

அங்கிருந்தபோது, ஒரே ஒரு பாடலை திரும்பத்திரும்ப கேட்க நேரிட்டேன்; பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யாசர் அராபத் என்னை பள்ளி விழாவொன்றுக்கு அழைத்திருந்தார்; அங்குதான் அந்தப் பாடலை முதன் முறையாக கேட்டேன்; குழந்தைகளும், இளைஞர்களும், சேர்ந்து பாடினார்கள்; அந்தப் பாடல் ''சொந்த வீட்டுக்குத் திரும்புதல்'' பற்றி சொல்வதாக இருந்தது.

தங்களுடைய சொந்த தேசத்தை அமைத்துக் கொள்ள சுதந்திர மாநிலங்களை நிர்மாணிக்கத் தேவையான எல்லாமும் பாலஸ்தீனர்களிடம் இருக்கிறது; அவர்கள் அறிவுள்ள, துணிவுள்ள மக்கள்; ஒரு ஒளி நிரம்பிய எதிர்காலம் அவர்களுக்காக காத்திருக்கிறது.

அவர்களிடையே, அரேபியாவிலேயே புகழ் பெற்ற இலக்கிய உலகை சிருஷ்டித்துள்ள வியக்கத்தக்க கவிஞர்கள் இருக்கிறார்கள்; பயிற்சிப் பெற்ற மருத்துவர்களும் ஆசிரியர்களும் இருக்கிறார்கள்.

அனைத்து முற்போக்குச் சக்திகளும் அவர்களுக்கு உறுதுணையாக உள்ளன; அவர்களின் ஒற்றுமையை உடைத்துப் பிரிக்க முடியாது என்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பதை அங்கிருந்த நாட்களில் நான் தெளிவாக உணர்ந்தேன்.

காற்று சுழன்றடிக்கும் நேரத்திலும் கூட குழந்தைகள் பள்ளிகளுக்கு தொடர்ந்து சென்று கொண்டிருந்தார்கள், திருமண வைபோகங்கள் தடை ஏதுமின்றி நடந்து முடிகின்றன; நான் கூட பாலஸ்தீன சமூகத்தில் இன்னுமொரு நியூக்ஸியஸாய், பாலஸ்தீன குடும்பத்தில் மேலுமொரு ஜனனமாய் உருவெடுத்த 'திருமண விழா' ஒன்றில் கலந்துக்கொண்டேன்.

என் காகஸிய மலைப் பிரதேசமக்கள் சொல்வார்கள்: ''உலகின் நலனுக்காக எவற்றை நீ உனக்கு செய்யக்கூடாது என்று நினைக்கிருயோ, அவற்றை மற்றவர்களிடமும் நீ செய்யாதிருக்க வேண்டும்.'' என்று.

பிறகு ஏன் இஸ்ரேலியர்கள் கொலைவெறி தாண்டவமாடும் ஆக்ரமிப்புகளை இன்னும் செய்துகொண்டிருக்கிருர்கள்?

ஒரே நிலத்தில் அமைதியோடும் நட்போடும் ஏன் இரண்டு இன மக்களான பாலஸ்தீனர்கள்—இஸ்ரேலியர்கள் சேர்ந்து வாழ சாத்தியமற்றுப் போனது?

எண்ணமுடியாத நட்சத்திரங்களுக்கு வானில் இடமுள்ள அளவு, கணக்கில் அடங்காத அலை வரிசைகளுக்கு சமுத்திரத்தில் இடமுள்ள அளவு, உலகின் எல்லா மக்களும் இணைந்து வாழ பூமியிலும் இடம் இருக்கிறது.

ஆனல் இந்த பிரகாசமான இருபதாம் நூற்ருண்டு மத்தியகிழக்கில் வாழ்கின்ற அரபுக்கள், இஸ்ரேலியர்கள் இவர்களின் சந்ததிகளுக்கென்று எதனை விட்டுச் செல்லும்?

ஒவ்வொருவருடனும் நட்புறவு, சமாதான சகவாழ்வு என்ற கோட்பாடுகளுக்கு மாருக பகைமைப் பாராட்டும் பண்பையா?

அப்படித்தானென்ருல் அந்தப் பகைமை உணர்ச்சியை மக்கள் மனதில் இருத்தி வளர்த்து வருவது யார்?

போர் நிறுத்தத்திற்கான 'கேம்ப் டேவிட்' ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டவர்களா? ஆதிக்கப் பேயர்களின் ரத்தவெறிக் கைகளிடம் தங்களின் உறவு பாராட்டும் தோள்களை பறிகொடுத்தவர்களா?

அல்லது அயலான் வீட்டில் அனுமதியின்றி நுழைந்ததோடல்லாமல் அந்த வீட்டின் சொந்தக்காரர்களாய் தங்களைக் கற்பிதம் செய்துக் கொண்டு அகந்தையுடன் கட்டளைப் பிறப்பிப்பவர்களா?

அதிகரித்து வரும் ஏகாதிபத்தியத்தின் 'ஆக்ரமிப்பு விழைவுகள்' தான் 'போரை எதிர்த்தல்'; என்ற உணர்வை மக்களுக்கு ஊட்டின; இது மிகவும் இயல்பானதாகும்; இன்றுவரை இதில் மாற்றமும் இல்லை; பாலஸ்தீனர்களது போர்-எதிர்ப்பு நடவடிக்கைகள் நாளுக்கு நாள் வலுத்தே வருகின்றன.

'வெகு ஜனப் பேரழிவைத் தடுத்தல்'; 'அதற்காக உத்வேகத்தோடு எதிர்த்து போர்புரிதல்'; இவையே பாலஸ்தீனர்களின் தேசிய முன்னணி இன்று மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள்.

இவர்களின் இந்த போர் முறையை நான் மிகவும் நேசிக்கிறேன்; அனைத்து அரபு மனங்களிலும் இதுவே எதிரொலிக்கிறது.

அங்கு வாழ்கின்ற எகிப்தியர்களை நான் சந்தித்தேன்; அவர்கள் தங்களை சமாதானத்தின் விரோதிகளாக காட்டிக் கொண்டார்கள்; வெகு ஜன இயக்கத்திற்கு எதிரான கருத்துக்களை உடையவர்களாக இருந்தார்கள்; அரபு மக்கள் அன்பான (?) ஆதிக்க நெஞ்சர்களுக்கு ஒத்துழைக்காததை கடுமையாக சாடினூர்கள்.

அவர்கள் சொன்னதில் சிறிது உண்மையும் இருந்தது; அதாவது அரபுகளிடையேயும் உராசல்கள் நிலவின; செயல்பாடுகளில் தவறுகள் நேர்ந்தன; பல பல கஷ்டங்களுக்கு ஆளாஞர்கள்; ஆனுலுமென்ன? அனுபவங்கள் அவர்களுக்கு மனித ரத்தம் சிந்தப்படுவதை எதிர்க்கவே சொல்லித் தருகின்றன.

அந்நிய தேச ஆக்ரமிப்பாளருக்கு ஒத்து ஊதும் நியோ-கலோனியலிஸ்டாகவும், சர்வாதிகாரத்தின் தலைமையாசனத்தில் திமிரோடு வீற்றிருப்பவராகவும் உள்ள எந்த ஒரு கவிஞரையும், எழுத்தாளரையும் என்னல் அங்கு பார்க்க முடியவில்லை;

கவிதை, இசை-இரண்டும் எதிரிகளை பழி தீர்க்கும் வெறிகொண்ட மனித நேசத்தின் ஆயுதங்கள்; விரைவில் நிகழப்போகும் உன்னதங்களுக்கு காரணமாக இருப்பவை.

இந்த விதத்தில் கலை - இலக்கியத்தை கைகொண்டு, மனிதகுலத்தை முன்னேக்கி கூட்டிச் செல்லும் கலைஞர்களையே நான் அங்கு பார்த்தேன்; அவர்களின் வெற்றி நிச்சயமானது; ஏனென்ருல் அவர்கள் நீதியின் பக்கத்தில் நிற்கிருர்கள். ☐

தமிழில்: ஜே. சாந்தாராம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுழல்

எஸ். கண்ணன்

பூக்கடை அது. ரோஜாவும் மல்லிகையுமாய்ப் பூமாலைகள். சுற்றிச் சுற்றி வரும் தேனீக் கூட்டம். அவ்வழியில் செல்லும் ஒவ்வொருவரும் மாலைகளை ரசித்தபடியே தங்கள் பாதையில் நடந்தனர். கல்லாப் பெட்டியில் கிடந்த காசுக்கு தாங்க முடியாத கோபம் அதைப்பார்த்து.

''மாலையானால் மரித்து விடும் அற்பப் பூக்கள்...இது கூடவா புரியாது இந்த மனிதர்களுக்கு? புரிந்தால் இப்படி ரசிப்பார்களா? என்று சலித்துக் கொண்டது.

இருக்காதா பின்னே? அதன் கட்டுக்குலையாத மேனியின் வயது பத்து. இன்னும் மெருகு குலையாத பளபளப்பு. பூக்களிடம் உண்டா இவைகள்.

ஞாபகப் படுத்த வேண்டும். சலசலக்கும் கர்வம் பிடித்த பூக்களுக்கு. லேசாய்க் கனைத்தது காசு. ஒரு ரோஜாப்பூ முகம் திரும்பியது.

"ஏய் பூ அலட்டாதே ரொம்ப. சாயங்காலம் செத்து விடுவாய். மறந்து விட்டாயா?'' என்றது காசு.

ரோஜாவின் முகத்தில் ஆச்சர்யம். அதைத் தொற்றியது ஒரு பீதி.

''ஐயோ! ஞாபகப் படுத்தாதே அதை. அழுவேன் நான்' என்று சிணுங்கியது, பூ. காசுக்கு குஷியோ குஷி. அது சொன்னது மலரை ஏளனமாகப் பார்த்து.

''அப்போ அழகு காட்டாதே! சிரிக்காதே! அழு! சாகும் வரை அழு!''

ரோஜாப்பூவிற்கு காசின் துர்ச்சந்தோஷம் புரிந்தது.



அதனால் அது ஒரு குழந்தையைப் போலக் காசைக் கேட்டது.

ஐயோ காசே! என்ன கொடுமை உன் புத்தி. பிறர் அழுதால் சந்தோஷமா உனக்கு? உலகத்தில் இது கேவலமாயிற்றே! என்ன செய்வேன் நான்? அழகு காட்டுவது என் தவம். என் ஒரு புன்னகைக்காகத் தானே காற்று என் விதைகளைச் சுமந்து கொண்டு போய் விதைக்கிறது. ஒரு மறக்க முடியாத புன்னகையோடு இப்போது அற்புதமான மணம் காற்றுக்கு. ஆகா இது எவ்வளவு பெரிய விஷயம்!.

''போதுமே உன் அற்பப் பெருமை. பூக்களின் கர்வத்தை நாங்கள் அறிவோம். வெறும் தற்காலிகப் பெருமை.''

அதற்காக என்னைப் பார்த்து இரக்கப்படு. நான் மரித்தால் ஒரு துளிக் கண்ணீர் சிந்து. உனக்கு அருகே பூத்த நட்சத்திரம் இன்று மாலை கருகி விடுமே. உனக்கு அது வருத்தமாயில்லை. அதுவும் உன்னோடு பேசிப்பழகிய நட்சத்திரம்''. ''நான ஏன் அழ வேண்டும்!-'' என்றது காசு உலோகக் குரலில்.

சாலையில் விலையுயர்ந்த கார் சப்தமே இல்லாமல் போனது. அது ஒரு தொழில் அதிபரின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "அழகு" காட்டுவது என் தவம் என் ஒரு புன்ன கைக்காகத் தானே காற்று என் விதைகளைச் சுமந்து கொண்டுபோய் விதைக்கிறது.'

கார். அவரே ஓட்டிக் கொண்டு போனார். அதைக் காட்டி காசு கர்வத்தோடு சொன்னது ''பூவே பார்த் தாயா, அந்தக் காரில். போவது யார் தெரிகிறதா ...பெரிய பணக்காரன். எவ்வளவு அழகாய் இருக்கிறான் பார். ஊரே அவன் உள்ளங்கையில். எல்லாம் என்னால்''

அடாடா அப்படியா? நான் உண்மையிலேயே பார்க்க வில்லை. பணக்காரர்கள் பளபளப்பாய் இருப்பார்கள்...பாம்பைப் போல. ஆனால் காரின் பின் சீட்டில் அந்தப் பணக்காரனின் மனைவி-என் ரசிகை-அவள் பேரழகி. பிறரை அபகரிக்கத் தூண்டும் பேரழகி. அப்படிப்பட்ட அழகிக்கு ஒரு முழம் பூ வாங்கித் தர மாட்டான் உன் பேரழகன். அவ்வளவு கருமி. கருமிகள் எதையும் ரசிக்க மாட்டார்கள். காசில் அவன் எவ்வளவு லாபம் பார்த்தானே அவ்வளவு நஷ்டம் பார்த்தான் மனைவியில்.

அந்த ரகசியம் எனக்குத் தெரியும். எல்லாம் உன்னால். பூ இதழ்களைக் குரும்பாய்ச் சிமிட்டியது.

'ஏன்? ஏனும். அவள்தான் அவனுக்குக் கிடைத்து விட்டாளே?''

பூ சிரித்தது. பிறகு ரகசியக் குரலில் சொன்னது. அவனுக்கு மட்டுமா கிடைத்தாள். இன்னொருவனுக்கும் தான். அவள் கள்ளக் காதலன் அற்புதமான கவிஞன். ஆனால் குரூபி...ஆ இத்தகைய பேரழகிக்கு அப்படி ஒரு குரூபிக் கவிஞன் ரகசியக் காதலனாகக் கிடைத்தது பாக்கியமே. அப்படிப் பட்டவனால்தான் அவள் அழகை உணர முடியும். மலர்கள் நாங்கள் அறிவோம் காதலர்களின் உள் நிலையை. காசை வைத்துக் காதலை அழிப்பவர்கள் அழகாய் இருந்து பயன் என்ன? பிணங்கள் கூட அழகாய் இருக்கலாம். உன் காரில் போபவன் அப்படி ஒரு கழிசடை.

> ச்சே ஒரு மனிதன் இவ்வளவு கீழானவனாக இருப்பானா என்ன? தன் கனவையே கூடத் தங்கத்தாலும் வெள்ளியாலும் எடை போடுகிறானே.
>
> — கலில் கிப்ரான்

காசு முகம் துடிதுடித்தது. கோபத்தால் அதன் தலை சிலிர்த்தது. "உன் பின் சீட்டுக் காரி அதுதான் அவள்.... அவள் ஒரு துரோகி!''

அவன் காரை ஓட்டுபவன் அவன் என்னவாம். இஷ்டமில்லாத அவளை விலை போட்டு வாங்கினானே அது என்னவாம். யாருக்கும் துரோகத்தின் நியாயத்தைப் பார்க்கத் தைரியம் கிடையாது. அதுவும் நீ பார்க்கவே மாட்டாய். உன் பிறப்பின் லட்சியமே துரோகம்-அது தானே என்றது மலர் சூடாக. அந்த வெக்கையில் இதழ்கள் ஒரு நூலிழை வாடின.

''அதை விடு.. உலோகமாய்ப் பிறந்த எனக்கு மனிதர்கள் செய்த கேவலத்தைப் பெரிது படுத்தாதே. மனிதர்களே வேடிக்கைதான். என்னை வட்ட வட்டமாய் வெட்டுவார்கள். சில இலச்சினைகளை அவர்களே என் மீது குறிப்பார்கள். அவ்வளவு தான், என்னைப் பார்த்து அஞ்சி அஞ்சி சாவார்கள். அல்லது என்னைச் சிலையாகச் செய்வதும் அவர்களே. என் காலில் விழுந்து கண்ணீர் மல்குவதும் அவர்களே. இப்படிப்பட்டவர்களை எந்தக் கணக்கில் சேர்க்க. நீ விஷயத்திற்கு வா! நீண்ட காலம் வாழக் கூடிய என்னைக் காட்டிலும் நீ எந்த விதத்தில் உசத்தி.' அதைச் சொல்லத் துப்பில்லாமல் ஏதேதோ உளறுதே.

மலர் ஆழ்ந்து யோசித்து மௌனமானது. இப்போது தான் முதன் முறையாக அது யோசிக்கிறது. ஆமாம் எந்த வகையில் தான் உசத்தி. உலோகமோ பளபளப்பானது. பலமானது. நீண்ட ஆயுளைக் கொண்டது. நீட்டினாலும் குறுக்கலாம். குறுக்கினாலும் நீட்டலாம். ஆனால் நாமோ கை பட்டால் வாடி விடுவோம். காற்றுப் பட்டால் உதிர்ந்து விடுவோம். காலையில் பிறந்து மாலையில் மரித்து விடும் அற்ப ஆயுள். கொஞ்சம் அழகு. கொஞ்சம் புன்னகை. எல்லையற்ற சுய பரிதாபம். எந்த வகையிலும் சிறந்தவள் இல்லை. பின் அந்த காசிற்கு ஏன் அப்படித் தோன்றுகிறது?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 'பூக்களே அற்பம் தான். என்னைப்பார் எந்தப்புயலும் எந்தப் பூகம்பமும் என்னை ஒன்றும் செய்யமுடியாது.

பூ தியானத்தில் ஆழ்ந்தது. அதன் உள்முகத் தேடலில் இரு இதழ்கள் வாடின. ஈரிதழ் நஷ்டத்தில் பூ கண்டுபிடித்தது, விடையை. இப்போது ஒரு ஞானியின் தீட்சண்யத்துடன் நாணயத்திடம் சொன்னது.

"காசே! விஷயம் மிகவும் எளிமையானது. வேடிக்கையாயிருக்கும் உனக்கு. நம்பமாட்டாய் நீ, உண்மையின் சிக்கலே இதுதான்..." என்று பீடிகை போட்டது.

''சொல் நீ. நான் நம்புவேன். ஒரேயடியாய் நீட்டாதே!''

"மகிழ்ச்சி. ஆனால் சொல்லியும் அர்த்தமில்லை. சொல்லாவிட்டாலும் அர்த்தமில்லை.''

''புதிர் வேண்டாம் பூவே சொல்கிறேன். அது என்கடமை. ஈரிதழ் நஷ்டம் எனக்கு. அதை மறந்து விடாதே. விஷயம் இதுதான். இப்படிப் பூவாக மலர நான் ஆசைப்பட்டேன். ஆசைப்பட்டதற்காக தியாகம் செய்தேன். ஒரு புன்னகை பூத்த முகம். ஆனால் ஒரே ஒரு நாள் உயிர்; இது வேண்டுமா அல்லது வலிய உடல், நீண்ட ஆயுள் இது வேண்டுமா? என்ற ஒரு கேள்வி என்முன் வைக்கப்பட்டபோது நான் ஒரு புன்னகை பூக்கும் முகத்தைத் தேர்வு செய்தேன்...''

...

''இல்லை நான் நம்பமாட்டேன். எனக்குப் புரியவில்லை நீ பேசுவது'' என்றது காசு.

என்னை மன்னித்துவிடு. என் பாஷைக்குச் சக்தியில்லை. எனக்கும் உனக்கும் தாய் ஒன்றுதான். அது இந்த பூமி. உன்னிலே நீண்ட ஆயுளை விரும்பியது. நீ அதைப் பெற்றாய். அதுபோல என் தாய் ரோஜாச் செடி. ஒரு ரோஜாச் செடியாக விரும்பியது. நான் அதன் இலையாகவோ முள்ளாகவோ ஆகாமலிருக்கத் தவம் செய்தேன். எனக்கும் பூவாய் மலரும் வரம் கிடைத்தது. இப்படியாக நான் ஒரு மலர். நான் பிரதானம். ஆனாலும் யோசித்துப் பார்த்தால் என்னுள் என்தாயும் என் சகோதரர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்குள் வேறு ஒரு காலத்தில் பூக்கப் போகும் நான் அடேயப்பா எவ்வளவு காலங்கள் முழிக்கக் காத்திருக்கின்றன. அடேடே! உன்னிடம் இதுதான் இல்லை... இந்த வகையில் நான் உன்னைவிட உசத்தி. காலங்களை விழிக்கச் செய்யும் ஒரு அற்புதவிதை. நீண்ட ஆயுளை உடைய உன்னிடம் உண்டா காசே!..."

அந்த அழகிய சிறுமலர் தனக்கே ஒரு ரகசியம் விடுபட்ட வியப்பில் பரவசப்பட்டது.

> வாழ்க்கையின் இரண்டு பரிசுகள் அழகும் உண்மையுமாகும். அழகு நேசிக்கும் மனதில் இருக்கிறது. உண்மை உழைப்பவனின் கைகளில் இருக்கிறது
>
> — கலீல் கிப்ரான்

நாணயத்திற்குச் சலிப்பாயிருந்தது அதன் வியப்பு.

"பூவே நீ முட்டாள். ஆனால் இவ்வளவு பெரிய முட்டாளாகவா இருப்பாய். நீ வாழாத ஏதோ ஒரு காலத்திற்காக அற்ப ஆயுளைப் பெற்று, அற்ப அழகைப் பெற்று பூக்களே அற்பம் தான்...என்னைப் பார் எந்தப் புயலும் எந்த பூகம்பமும் என்னை ஒன்றும் செய்ய முடியாது."

''இதனால் தான் நீ உலோகம்.... நான் மலர் என்று பரிதாபத்தோடு சொல்லிக் கொண்டதுமலர்.

பிறகு இரண்டும் தத்தம் வயப்பட்டு மௌனத்தில் ஆழ்ந்தன.

கடையருகே ஒரு கார் நின்றது. கார்க்காரன் ஒரு ரோஜாப் பூமாலையை பேரம் பேசி வாங்கினான். கடைக்காரன் மீதிச் சில்லறையோடு மலரோடு பேசிய ஒரு ரூபாயையும் தந்து பூமாலையையும் தந்தான்.

''கார் புறப்பட்டது. நாணயம் கேலியாகச் சிரித்தபடி பூவிடம் சொன்னது. பரவாயில்லை உனக்குக் கூடக் கார்ச்சவாரி'' பூவின் மனதில் தாளாத துக்கம். எனவே அது எரிச்சலோடு ''கேலி வேண்டாம் காசே. இந்த அற்பனின் காரில் ஏறியது என் சாபம். மலர்களாய்ப் பிறந்த எங்களுக்கு வரங்கள் மட்டுமல்ல. இத்தகைய சாபங்களும் உண்டு.''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மலர்களின் கோப்பம் உனக்குத் தெரியாது. விழிக்கக் காத்திருக்கும் காலங்களை இங்கு நான் சிந்தியிருக்கிறேன்.

கார் நேரே ஒரு குடிசைப் பகுதியில் போய் நின்றது. ஒரு குடிசையின் வாசலில் வாடி வதங்கிப் போன ஒரு பெண்ணின் சடலம். காரில் வந்தவன் அந்த மாலையை அதன் கழுத்தில் போட்டு விட்டு அந்த ஒரு ரூபாயை நெற்றியில் பதித்துவிட்டு யாருடனும் பேசாமல் நடந்தான்.

அவள் சடலத்தைச் சாகும் நிலையில் இருந்த நால்வர் தூக்கிச் சென்றனர். அவள் கணவன் தீச்சட்டி ஒரு கையிலும், மகள் ஒரு கையிலுமாகப் பின்னே நடந்தான். வேறு யாரும் இல்லை. அந்தச் சிறுமியின் முகத்தில் இனமறியாத் தவிப்பு. இனம் புரியாத கண்ணீர்.

இறந்தவளின் கழுத்தில் கிடந்த ரோஜா குலுங்கிக் குலுங்கி அழுதது. வருவோர் போவோரை எல்லாம் வாருங்கள். நீங்களும் சம்மந்தப்பட்ட உங்கள் மனுஷியின் இறுதிப் பயணம் இது!' என்று மன்ருடியது.

யாரும் அதன் குரலை காதில் போட்டுக் கொள்ளவில்லை.

''கொலைகாரர்களே! உங்கள் ஒவ்வொருவருக்கும் இக்கொலையில் பங்குண்டு'' என்று பாடையின் ஓரத்துக்கு வந்து கூவியது. யாரும் வரவில்லை.

''பழிவாங்குவேன் நான்'' என்று கோபத்தோடு முகம் சிவந்தது பூ.

இதைப் பார்த்த காசிற்கு ஒரே ஆனந்தம். ''பார்த்தாயோ பூவே! நெற்றியில் நான் நீயோ...எனக்குக் கீழே!'' ''இங்கும் கூட...ச்சீ அற்ப ஜென்மமே. ஒழியட்டம் உன் கர்வம். நான் இந்த மனுஷியின் இதயத்தில் இருக்கிறேன். வாடி விட்டாள் இப்பேதை. இல்லை என்ருல் நான் கிடைத்த ஆனந்தத்தில் உலகத்தை ஒரு சுற்று சுற்றுவாள். அவள் எத்தகைய ரசிகை என்று எனக்குத்தான் தெரியும். ஆனல் அவள் உயிருடன் இருக்கும் நாளில் ஒரே ஒரு ரோஜாமலர் யாரும் வாங்கித் தந்ததில்லை. இப்போது சவமான பின் அவள் உயர் ஜாதி அண்ணன் ஒரு மாலையே வாங்கிச் சாத்தியிருக்கிருன். ஒரு பிணத்திற்கு....''

''ஏனும்...'' என்றது காசு.

...ஏனும்....என்று தன்னையே கேட்டுக் கொண்டது மலர். பின் துயரத்தோடு சொன்னது. ''மனிதர்கள் மலர்களில் உசத்தி தாழ்த்தி பார்ப்பதில்லை. ஆனல் தங்கள் சொந்த இனத்துக்குள்...நீ சொன்ன மாதிரி மனிதர்களே விசித்திரம் தான் ....ம்...இவளுடைய கீழ் ஜாதிக் கணவன் ஒரு அன்ருடக் கூலி. ஐந்து ரூபாய் சம்பளம். எல்லாச் செலவும் போக ஒவ்வொரு நாளும் பத்துப்பைசாவே மிச்சம். ஒவ்வொரு நாளும் தன் இளம் மனைவிக்கு ஒரு பூ... ஒரே ஒரு ரோஜாப்பூ வாங்க ஆசைப் படுவான். ஆனல் ஒரு நாள் கூட வாங்கியதில்லை. அதைவிட முக்கியம் மகனுக்கு ஒரு பிஸ்கட் ...... என்றது கண்ணீர் கொட்டியபடி. ''இந்தக் கிழவிக்கா... நல்ல அழகுதான் போ!'' இவளா....இவளா கிழவி....ம்.... ஆக்கப்பட்டாள் அப்படி....எல்லாம் உன்னுல்...

சுமந்தவர்கள் சாய்த்துச் சுமையை இறக்கினுர்கள். ரோஜாப்பூ கீழே விழுந்தது. அதோடு காசும் விழுந்தது.

அந்தச் சிறுமி ஒடிவந்து பூவை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள். அம்மா! அம்மா! என்று கேவினுள். அவள் கண்ணீர் ரோஜாவை நனைத்தது. என் ஜென்மம் சாபல்யம் அடைந்தது மகளே என்று சொல்லிக் கொண்டது பூ. பின் அச்சிறுமியின் பொத்தல் கௌனையும், பரட்டைத் தலையையும் பார்த்த அப்பூவின் இதயம் பற்றி எரிந்தது.

''ஐயோ மகளே!'' மலர் விசும்பியது. அழாதே மகளே. இதோ இந்த இடத்தில் ஜனிப்பேன் மீண்டும் நான். வெஞ்சினம் கொண்டவள் நான். மலர்களின் கோபம் உனக்குத் தெரியாது. விழிக்கக் காத்திருக்கும் காலங்களை இங்கு நான் சிந்தியிருக்கிறேன்.... இப்படியாகப் பழி வாங்குவேன்...ஒவ்வொரு சுடுகாடும் நந்தவனமாய்ப் பெருகும் வரை நான் ஓயமாட்டேன்... அம்மா! அம்மா! என்று தேம்பினுள் சிறுமி.


ஐயோ மகளே கருகி விட்டேனே நான் என்றது அந்த மலர். பளபளப்பான காசு சர்ப்பம் போல் மின்னியது.

நான் கருக மாட்டேன்! எச்சரிக்கை! என்று உறுமியது பணம்.

அச்சிறுமி நாணயத்தைத் தாண்டிப் போய்த் தன் தாயின் தலைமாட்டில் அமர்ந்துள்ள தந்தையின் மார்பில் முகம் புதைத்தாள். ❑

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 1857
# முதல் சுதந்திரப் போர்

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் இந்தியாவைக் குத்திக் கிழித்ததுமல்லாமல் போகும் போதும் இம்மாபெரும் நாட்டின் வரலாற்றைக் கொச்சைப்படுத்தியும், தேசபக்த வீரர்களை அசிங்கப்படுத்தியும், இந்தியக் கலாச்சாரத்தை இழிவு செய்தும் எழுதிச் சரித்திரமாக விரித்திருக்கிறார்கள்.

அதைப் படித்து தேசத் துரோகிகளும், ஆதிக்க வெறியர்களும், இன்றுவரை வரலாற்றுக்கு விபரீதமான விளக்கங்கள் கொடுக்கின்றனர்.

'பிரிட்டன் இந்தியாவை ஆண்டது' என்ற கீழ்த்தரமான வரலாற்று உண்மை நாட்டுப் பற்றுமிக்க ஒவ்வொரு ஆங்கிலேயனுக்கும் கூடச் சுடும்போது நமது, சொந்த நாட்டுக்காரர்கள் சிலருக்கு வெள்ளையன் சமுக அளவில் முற்போக்காகத் தெரிகிறான். நாட்டு விடுதலைக்காகப் போராடிய பரந்த மக்கள் முதல் அதற்காகப் பாடிய கவிஞன் வரை சாதி வெறி பிடித்தவர்களாகத் தெரிகிறார்கள். அதனால் தான் வாஞ்சியின் துப்பாக்கி வெடித்ததன் காரணம் உயர்ஜாதி இந்துவின் ஜாதி வெறியாக தெரிகிறது. காலனியாதிக்கக் காட்டுமிராண்டிகள் பகுத்தறிவு மிக்க நாகரீகமானவர்களாகத் தெரிகிறார்கள். ஐரோப்பியன் என்றாலே விஞ்ஞான அறிவுடையவன் என்றும், கீழை நாடுகளில் விஞ்ஞான அறிவே கிடையாது என்றும் அர்த்தம் கொள்ளப்படுகிறது. பாரதியின் கால சமூக அரசியல் நிலைமையைக் கணக்கில் கொள்ளாமல் பார்ப்பனிய வெறியனாகக் காட்ட முயற்சிக்கிறார்கள். கப்பலோட்டிய தமிழன் வ.உ.சியின் நோக்கம் வெறும் லாப நோக்கமாகக்

www.tamilarangam.net



## சிந்தும் என் ரத்தத்திலிருந்து ஓராயிரம் தேசபக்தர்கள் பூத்து ஏகாதிபத்தியமே உன்னை அழிப்பார்கள்.

குறுகிக் காட்டப்படுகிறது. அதனால்தான் நாம் இன்றும் ஸ்ரீமான் மவுண்ட் பேட்டனுக்கு ஸ்டாம்ப் போடுகிறோம், பகத்சிங்கை ஓரம் தள்ளுகிறோம். அதனால்தான் 'இளவல்' சார்லசுக்கு இரத்தினக் கம்பளம் விரிக்கிறோம். அதனால்தான் இன்னும் தெரிந்தும் தெரியாமல் என்னென்னவோ செய்கிறோம்.

இத்தகைய சூழலில் ஒரு தேசத்தின் வரலாற்றை விஞ்ஞானக் கண்கொண்டு எப்படிப் படிப்பது என்பதற்கு உதவியாக இக்கட்டுரை 'இந்தியா நௌ' என்ற பத்திரிகையில் வெளியானதை ஆதாரமாகக் கொண்டு வெளியிடப்படுகிறது. இது பிரதானமாக 1857-ல் நடந்த முதல் சுதந்திரப் போர்க் காலக்கட்டத்தை மையப்படுத்துகிறது. வெள்ளை ஏகாதிபத்தியம் இப்போரைச் சிப்பாய்கள் கலகம் என்று கூறியது.

''தோழர்களே ஆயுதங்களை ஏந்துங்கள்! நமது அவமானங்களைத் துடைத்தெறிவோம்!'' கர்ஜித்தான் மங்கள் பாண்டே. நாள் மார்ச் 29, 1857.

### வரும் வெற்றியை நோக்கி ...

இருண்ட மலைகளின் பின்னிருந்து
வைகறையின் குத்தீட்டிகள்
மெல்ல எழுகின்றன.
கறுப்பு நிழல்கள்
தெருச்சாக்கடைகளில் பதுங்கு கின்றன.
பனிப்புகையும் பொய்ப் பேய்களும்.
சந்து பொந்துகளில் வெற்றுப் பாழில்
மெல்லப் புதைகின்றன.
தம் நீண்ட இரவு
திரும்பி வராப் பழமைக்குள்
தூங்கப் போய்விட்டது.
வரும் ஒளியில்
தம் தலைக்குனிவு நீங்கி
ஓங்கி உயர்கின்றன
வயற் பூக்கள்,
ஆப்பிரிக்க மூலம்: டென்னிஸ் புருட்டஸ்

தமிழில்: தர்ஸனா

மேஜர் ஹக்சன் அந்த தேசபக்தனைக் கைது செய்ய ஒரு அடி எடுத்தான். பாண்டேயின் கைத் துப்பாக்கி எக்காளமிட்டது. மேஜர் ஹக்சன் மண் தின்றான். முதல் விடுதலை முழக்கத்தைத் துப்பாக்கி முழங்கியது.

மங்கள் பாண்டேயைக் கலகக்காரனாகவும் இந்த நிகழ்ச்சிக்குக் காரணம் வெறும் மத உணர்வாகவும் கூறியது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்.

சாமியார்கள் ஆயுதம் ஏந்துகிறார்கள் பீகாரிலும் வங்காளத்திலும்! யார் இந்தச் சாமியார்கள்? நமது பழமையான விவசாயப் பெருங்குடிகளும், கை வினைஞர்களும்தான். அவர்களின் சொந்த மண்ணைத் தட்டிப் பறித்தது மல்லாமல் கைகளில் திருவோட்டையும் தந்துவிட்டு வாரன் ஹேஸ்டிங்ஸ் கூறினான், ''இவர்கள் கொள்ளைக்காரர்கள்' என்று. ஆனால் உண்மையில் நிலமிழந்த விவசாயிகளும் கைவினைஞர்களும் ''மஞ்சு ஷா என்ற வீரனின் தலைமையில் புரட்சி செய்தார்கள். இப்புரட்சியாளர்கள் கிழக்கிந்தியக் கம்பெனியின் கூடாரங்களைத் தாக்கி, பறிமுதல் செய்யப்பட்டவைகளைப் பறிமுதல் செய்து விவசாயிகளுக்கு வழங்கினர். இறுதியாக ஷா கடுமையான வீரத்தழும்புகள் ஏற்றுச் செயலிழந்தான். இது 1768க்கும் 1800க்கும் இடையில் நடந்தது. இப் புரட்சியை சந்நியாசிகள் ரகளை என்று கூறியது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்.

விவசாயிகளும், நிலப் பிரபுக்களும் மோதிக் கொண்டார்கள். வங்கத்தின் மித்னபூரும், தல்பமும், குருஷேத்திரத்தைத் தொடர்ந்தன. திரிபுராவில் தேச விரோத நிலப் பிரபுக்களையும் ஆங்கிலேயரையும் எதிர்த்து ஷாம்ஷியர் புரட்சியாளர்கள் வீரப்போர் நடத்தினார்கள். 1770 முதல் 1800 வரை கைவினைஞர்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களின் மீது திணிக்கப்பட்ட வரியை எதிர்த்து புரட்சியில் இறங்கினார்கள்.

சீன வியாபாரத்திற்காக அபின் பயிரிடுதலை ஆங்கிலேயர்கள் தங்கள் கைகளில் எடுத்த போது சிறு அபின் உற்பத்தியாளர்கள் போர் தொடங்கினார்கள். இது சுமார் இருபது

www.tamilarangam.net



# மேஜர் ஹூக்சன் மண் தின்றான். முதல் விடுதலை முழக்கத்தைத் துப்பாக்கி முழங்கியது.

வருடங்கள் நீடித்தது. அதே போல் சுதேசி உப்பளத் தொழிலாளர்கள். ஆங்கிலேயர்கள் கைப்பற்றிக் கொண்ட உப்பு வியாபாரத்தைக் கைப்பற்றப் புரட்சி செய்தார்கள்.

கோரக்பூர், ரங்பூர், பிர்பும், பங்கூரா மற்றும் பீகாரின் இதரப் பகுதி விவசாயிகள் அதீத வரியை எதிர்த்தும், ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் தீவிரமாகப் போர் புரிந்தார்கள். அதுமட்டுமா தென்னாட்டில் கர்னாடகப் புரட்சியாளர்கள். மகத்தான வேலூர் புரட்சியாளர்கள் 1801-1805ல் ஆகிய வருடங்களில் ஆயுதம் ஏந்தினார்கள். திவான் வேலுத்தமபி, வேலூர், திருவாங்கூர் புரட்சியாளர்களுக்கு தலைமை தாங்கினார்.

இப்படித் துண்டு துண்டாக நடந்த புரட்சிகளை ஒன்றுபடுத்த நானுபரன்வீசும், ஹைதர்அலியும் முயன்றனர். ஆனால் முழுமையான வெற்றி கிட்டவில்லை.

டல்ஹௌசி கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டான். அவன் வெளிப்படையாகவே ''குமரியிலிருந்து இமயம்வரை பிரிட்டிஷ் ஆட்சியை விரிவாக்குவதே தனது நோக்கம் என்று கூறினான்.

தங்களைக் கௌரவக்குறைவாக நடத்தினால் உத்தரவுகளுக்கு கீழ்ப்படிய மாட்டோம் என்று இந்தியச் சிப்பாய்கள் தன்மானப் போரில் இறங்கினார்கள்- தாமரைப் பூ விடுதலைச் சின்னமானது. சப்பாத்திகள் ரகசியச் செய்திகளைப் பரிமாறின. மே மாதம் 31ந் தேதி தேசந்தழுவிய எழுச்சிக்குரிய நாளாகக் குறிக்கப்பட்டது. ஆனால் சரியாகக் கட்டமைக்கப்படாததால் புரட்சியாளர்கள் எதிர்பார்த்தற்கும் முன்பாகவே சிதறினர்.

மீரட் எழுந்தது. கொழுப்புத் தடவிய தோட்டாக்களைப் பயன்படுத்த மறுத்ததற்காக பிரிட்டிஷ் அதிகாரிகள் எண்பத்தைந்து வீரர்களை வேலைநீக்கம் செய்து பதினைந்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தார்கள். இந்த நிகழ்ச்சி மற்ற வீரர்களையும், மீரட்டின் பொதுமக்களையும் தட்டி எழுப்பியது.

மே, பத்தாம் தேதி, ஞாயிற்றுக்கிழமை. பிரிட்டீஷ் அதிகாரிகள் தங்கள் பாவங்களைக் கழுவக் குடும்பத்துடன் சர்ச்சுக்குப் போனார்கள். காத்திருந்த தேசபக்த வீரர்கள் சிறைக்கதவுகளைத் தகர்த்து தங்கள் தோழர்களை விடுதலை செய்தனர். அதே கைகளால் சர்ச்சுக்குச் சென்று அதிகாரிகளை அங்கேயே சமாதி வைத்தனர். மீரட் விடுதலைப் பகுதியாயிற்று.

அதிலிருந்து டில்லியை நோக்கி விடுதலைப் படை நடைபோட்டது. டெல்லி மக்கள் உற்சாகக் குரல் கொடுத்தார்கள்.

டில்லியின் பதினொன்றாவது மற்றும் இருபதாவது பிரிவுப் படைகள் சேர்ந்து கொண்டன. டில்லி விடுதலையானது. பகதூர் ஷா ஜபார் இந்தியாவின் சுய ஆட்சிப் பிரகடனத்தை வெளியிட்டார்.

டில்லி விடுதலையான செய்தி காட்டுத் தீயாய்ப் பிரவியது. பிராஜ்பூரில் தங்கியிருந்த

## நம் அம்மாவை நினைத்துக்கொள்

நம் அம்மாவை நினைத்துக்கொள்
நமக்காக சகலத்தையும்
பொறுத்துக்கொண்டு காத்திருக்கிறாள்.
நம் அப்பாவை நினைத்துக்கொள்
சிறைகளில் அடைந்து கிடக்கிறார்.
சுரங்கங்களில் ஆசுவாசமற்று உழைக்கிறார்.
நம் குழந்தைகளை நினைத்துக்கொள்
தெருக்களில் கொல்லப்பட்டு கிடந்தன அவை,
தெருக்களில் இன்றும் இறந்து
கொண்டிருக்கின்றன அவை,
ஆக்ரோஷத்தில்
முஷ்டிகள் உயர்த்தி சபதமெடுப்போம்.
ஆப்பிரிக்கா நிச்சயம் சுதந்திரம் அடைவாள்.
நாம் அவளை சுதந்திரப்படுத்துவோம்.

ஆப்ரிக்க மூலம்: இல்வா மேக்கே

தமிழில்: தர்ஸனு

www.tamilarangam.net



**சாமியார்கள் ஆயுதம் ஏந்துகிருர்கள் பீகாரிலும் வங்காளத்திலும். யார் இந்தச் சாமியார்கள் - நமது பழமையான விவசாயப் பெருங்குடிகளும் கைவினைஞர்களும்தான்.**

இந்திய வீரர்கள் டில்லியை நோக்கிப் பயணமாயினர். பெஷாவர் வீரர்களும் கலகத்தில் இறங்கினர். இது பிரிட்டிஷ் அரசுக்குத் தெரியவந்தது பட்டியாலாவின் தேசத் துரோக அரசனல் காட்டிக் கொடுக்கப்பட்டு வீரர்கள் நிராயுதபாணியானுர்கள். ஏகாதிபத்தியம் அவர்களைக் கொன்று குவித்தது. துரோகிகள் ரத்தம் குடித்தார்கள்.

ஒரு தேச பக்தனைத் தூக்கிலிட்டதை எதிர்த்து அலிகாரில் தங்கியிருந்த வீரர்கள் கலகம் செய்தார்கள். அதே போல் மெயின் பூரியிலும், எட்டாவா, பலுண்ட் ஷாகர், முதலிய பகுதிகளிலும் முகாமிட்டிருந்த வீரர்கள் ஆயுதபாணிகளானுர்கள்.

மே, 31ந் தேதி திட்டமிட்ட எழுச்சி ஆறே மணிகளில் பரேலியை விடுதலை செய்தது. பகத்கான் தேச பக்த சக்திகளுக்குத் தலைமை தாங்கினுர்.

மே 31ந் தேதி பெஞரசிலுள்ள வெள்ளையர் தலைமையகம் தேசபக்தர்களால் தீயிடப்பட்டது. ஆஜாம்காரிலுள்ள பதினேழாவது பிரிவுப்படையும் புரட்சியில் இறங்கி ஹட்சிஸன் லூயிஸ் என்ற இரு ராணுவ அதிகாரிகளைக் கொன்றனர்.

இப்படி இருக்கையில் ஏகாதிபத்தியவாதிகள் தங்களுக்குச் சாதகமான பகுதி என்று எண்ணிய அலகாபாத்தில் கூட படைவீரர்கள் தாய்நாட்டை விடுவிக்க இதரப் புரட்சியாளர்களுடன் ஒன்று சேர்ந்து அலகாபாத்தைச் சுற்றி வளைத்தனர். ஆனுல் வெள்ளை அரசு அதிலிருந்து தப்பிப் புரட்சியாளர்களைக் கொன்று குவித்தது.

கான்பூரின் நாஞசாகிப் மிக ரகசியமாகப் புரட்சியாளர்களைத் திரட்டினுர். கான்பூர் விடுதலையடைந்தது. கான்பூர் விடுதலையாளர்கள் மற்றவர்களைப் போல டில்லியை நோக்கி நடைபோடாமல் கான்பூரைப் பாதுகாத்தனர். எனவே பிரிட்டனின் முக்கிய தளம் புரட்சிக்காரர்கள் வசமாயிற்று.

அதே நேரத்தில் ஜான்சிப் படை வீரர்கள் கலகம் செய்தனர். இச்செய்தி காலேகான் மூலமாக ஜான்சிராணிக்குக் கிடைத்தது. உடனே ஜான்சிராணி நேரடியாகக் களத்தில் இறங்கினுர். எல்லா வகையிலும் புதுமையான முறையில் தேசபக்த மக்களை, ஜாதி, மத, பால், வயது வித்தியாசமின்றித் திரட்டி ஆயுதபாணியாக்கினுர். இந்தியாவில் முதன் முறையாக பெண்கள் ராணுவ சேவை செய்தனர். ரகசிய உளவு வேலைகளைச் செய்யும் பிரிவிற்கு இரு பெண்கள் தலைவர்களாக நியமிக்கப்பட்டார்கள். ஜான்சி விடுதலை செய்யப்பட்டது.

இந்நிலையில் ஹென்றி லாரன்ஸ் புரட்சியாளர்களை ஒடுக்கப் படை கொண்டு கிளம்பினுன். வழியிலேயே இந்திய வீரர்கள் அவனை எதிர்த்தனர். அவர்களுடன் நாற்பத்தெட்டாவது படைப்பிரிவும் சேர்ந்து கொண்டது. இந்த நெருப்பானது கால இடைவெளி இல்லாமல் சிட்டாபூர், பருக்காபாத், சிக்பேரா, கோண்டா, பைஜாயத், சுல்தான்பூர் மற்றும் பிற பகுதிகளுக்குத் தாவியது. ஆங்கிலேயர்கள் லக்ஞேவில் ஓடி ஒளிந்தனர்.

வெள்ளையன் காலத்தில் தலைநகரமாயிருந்த கல்கத்தாவில் இயங்கிய இந்தியப்பத்திரிகைகள் வெளிப்படையாகப் புரட்சியாளர்களை ஆதரித்தன. எனவே கன்னிங் பிரபு அப்பத்திரிகைகளுக்கு எதிராக ஆணையிட்டான்.

வங்கம் தொட்டுப் பீகாரில் புரட்சி கிளம்பும் என்று பிரிட்டிஷ் அரசு கணக்குப் போட்டது. அதே மாதிரி புரட்சியாளர்கள் மக்களில் பெரும்பான்மையைத் திரட்டிக்கொண்டு ஜூலை மூன்றும் நாள் இருநூறு ஆயுதந்தாங்கிய வீரர்களுடன் பீர்அலி தலைமையில் பாட்ஞ சர்ச்சைத் தாக்கினுர்கள். ஆனுல் பீர்அலி துரோகிகளால் காட்டிக்கொடுக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டான். சவக்குழியிலிருந்து அவன் கோஷமிட்டான்.

''சிந்தும் என் ரத்தத்திலிருந்து ஓராயிரம்
தேச பக்தர்கள் பூத்து ஏகாதிபத்தியமே
உன்னை அழிப்பார்கள்!''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வெயில்

அருட்குமரன்

மிகவிரைவில்
இது நேருமென்று
யாரும் எதிர் நோக்கவில்லை

கொடியது
அன்று புலர்ந்த காலை
மிகமிகக் கொடியதே

பயணம் தொடங்க
சிலகணங்களே இருக்க......
தம்பிகளோடு பேசிமுடிந்ததும்
சைக்கிளின் துணையுடன்
காற்றைக் கிழித்தேன்

காய்ந்திருந்த உதடுகளை
நாவால் வருடி
மெலிதாக நீ நகைக்க

இதழோரம்
ஈரத்தின் மினுமினுப்பு

பேசப் பொழுதின்றி
நான் நகர
சாளரத்தினுள்ளே
நீ அசைத்தாய்
உன் கரத்தை.

நெடுகாலமாயிற்று
நாம் பிரிந்.

துயர் நிறைந்த
அகழியொன்றில்
தூக்கியெனை யாரெறிந்தார்
கொதிக்கின்ற வெயிலினிலே
உடலெரிய
மனந்தகிக்க

உலகின்
கடைக்கோடி யொன்றில்
நாட்கள் நகர்கிறது
தூக்கம்வரமறுக்கும் இரவுகளில்
சாளரத்தினூடே
நீ அசைத்த மென்விரல்கள்
முன்னைவிட மெல்லியதாய்
மேலும் அழகியதாய்
கண்ணுள் விரிய
வான்வெளியைக் கூருக்கி
சிறகடிக்க மனசு துள்ளும்.

நான் வாழும் சென்னையிலே
மறுநாளும் அதேவெயில்
பத்திரிகை மூலைகளில்
வெயிலால் பலியானோர்
விபரம் தினம் வெளியாகும்.

---

அவன் கூறியமாதிரியே குன்வார்சிங் என்ற எண்பது வயது புரட்சியாளன் கொரில்லாப் போர் முறையைக் கொண்டு பிரிட்டிஷைத் தாக்கினான். அந்தப் போர் முறையில் ஆஜம்கர் பகுதியில் ஏகாதிபத்தியம் திக்குமுக்காடியது. உடனே ஜெனரல் பக்லஸ் பீரங்கி கொண்டு கோழைத்தனமாகக் கிளம்பினான். மகத்தான குன்வார்சிங் தனது பழுத்த உடலில் தேசத் தளும்புகள் ஏற்றான். எட்டுமாத காலம் போராடி ஏகாதிபத்தியம் இழந்த இடத்தைப் பெற்றது.

இத்தோடு சங்பம், பங்பம், சய்பாஸா, ராஞ்சி முதலிய பழங்குடி மக்களும் தங்களுடைய வில், வாள் தாரை தப்பட்டைகளுடன் ஏகாதிபத்தியத்தை எதிர்த்தார்கள்.

இப்படி எல்லாப்பிரிவு மக்களும் பங்கெடுத்தும் 1857ல் விடுதலைச் சக்திகள் ஏன் தோற்றது. அவர்களிடம் அனுபவக்குறைவு இருந்தது. தேசிய அளவில் திட்டமிடப்படவில்லை. புரட்சிக்குத் தலைமை தாங்கியவர்கள் பெரும்பாலும் அரச குமாரர்களும், நிலப்பிரபுக்களும் குட்டி அரசர்களுமாவார்கள். ஆனால் ஏகாதிபத்தியமோ, பயிற்சி பெற்ற இராணுவமும் நவீன வசதிகளும் பெற்றிருந்தார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக துரோகிகள் விடுதலை இயக்கத்தைக் காட்டி கொடுத்தார்கள். பகைத்தார்கள். ஆகவே 1857 இந்தியர்களுக்கு ஒரு பாடமாக அமைந்தது. அமைகிறது.

எனவேதான் இன்று வரை ஏகாதிபத்திய வழிகள் இவ்விடுதலை இயக்கங்களை சிப்பாய்கள் கலகம் என்றும் பன்றிக்கொழுப்பு, மாட்டுக் கொழுப்பு விவகாரமாகவும் இந்து-முஸ்லீம் பிரச்சினையாகவும் சித்தரிக்க முயலுகிறார்கள். ஒரு நாட்டின் விடுதலை இயக்கத்தின் அடிப்படை நோக்கத்தை திசை திருப்பினால் என்ன நடக்கும். அந்த நாடு தன் எதிர்காலத்தைத் திட்டமிடுவதில் தவறுகள் ஏற்படும். வரலாற்றில் நல்ல ஒரு உள்நாட்டுப் போரையும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரையும் சிறுமைப்படுத்துவது ஏகாதிபத்தியவாதிகளின் வழக்கம் என்பது நாம் ஒன்றும் படிக்காததல்லவே. அதேபோல இப் போராட்டங்களுக்குத் தலைமைதாங்கியவர்கள் சுத்த சுயம் பிரகாசமானவர்கள் அல்ல என்பதும் நாம் அறியாததல்லவே!

- சுதா

www.tamilarangam.net



## யாவரும் கேளிரென

ஒரு கடினமான நீண்ட நெடிய பாதையிலே காட்டாறுகளையும் புயல்வீசும் வறைந்தரங்களையும் தாண்டி ஆளுக்கு ஆள் கைகோர்த்துக் கொண்டு ஒரு நெருக்கமான கட்டுப்பட்டக் குழுவாக நாம் நடை யிட்டுக் கொண்டிருக்கிறோம். எல்லாப் பக்கங்களிலும் பகைவர்கள் நம்மைச் சூழ்ந்து கொண்டுள்ளனர். பகைவர்களின் ஏறத்தாழ இடை யறுத தாக்குதல்களுக்கு முகம் கொடுத்து நாம் முன்னேற வேண்டி யுள்ளது. சுயேச்சையாக நாம் ஒவ்வொருவரும் எடுத்துக் கொண்ட முடிவின்படி பகைவரை எதிர்த்து விடாப் பிடியாகப் போராடுவதற் காக நாம் ஒன்று சேர்ந்திருக்கிறோம்.

இந்தவகையில் ஒன்று சேர்ந்த போதும், நடை முறையில் ஏற் படும் அபிப்பிராய பேதங்களும் அணுகுமுறை மாறுபாடுகளும் பரஸ் பர சந்தேகத்தைத் தோற்றுவிப்பதோடு இறுக்கமான உறவுகளில் சில தளர்வுகளையும் கொண்டுவந்துவிடக் கூடியதாக இருப்பதை உணர முடிகின்றது. இத்தகைய போக்குகள் இனங்காணப்பட்டு தீர்க்கப்படாவிடில் - அபிப்பிராய பேதங்கள் நீக்கப்படாவிடில் இதன் எதிர் விளைவுகள் பாரதூரமானவையாகி விடக்கூடும். எனவே தோழர்கள் மத்தியில் இறுக்கமான தோழமை உணர்வை வளர்ப் பதற்கும், சுய விருப்புப்படியே கட்டுப் பட்டக் குழுவாக இயங்கச் செய்யவுமாக விமர்சனம், சுயவிமர்சனம் என்பது அத்தியாவசியமா கிறது.

எனினும், விமர்சனம் என்பது வெறுமனே ''குற்றங்காண்பது'' என்பதை அடிப்படையாகக் கொண்டு, தனிமனித ஆளுமைகளை நிலை நாட்டுவதற்குரியதான விதண்டாவாதப் போக்கில் அமைவது கட்டாய மாகத் தவிர்க்கப்படல் வேண்டும். ''குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை'' என்பது ஒரு தமிழ்ப் பழமொழி ; இது கூறுவது போல 'குறை காண்பது' அல்லது 'பிழை பிடிப்பது' என்ற மனோநிலையி லிருந்து ஆரம்பித்தால் நிறைவு என்பது கண்களுக்கு மறைக்கப் பட்டுவிடும். அதிலும் தேர்தல்கால அரசியல்போல தனிமனிதர் களுடைய குணாதிசயங்களை மையப்படுத்தி ''அவர் நல்லவர். இவர் வல்லவர்'' என்ற கணிப்பீட்டின் அடிப்படையிலமைந்த குறை காணும் போக்கு நிச்சயமாக விமர்சனமாக இருக்க முடியாது.

இன்னுமொரு ஆபத்தான போக்கும்கூட நடைமுறையில் காணப் படுகின்றது. சொந்தப் பலவீனங்களை சுயவிமர்சன அடிப்படையில் ஏற்றுக் கொண்டு தத்தமது இயலாமைகளை உணர்ந்து திருந்திக் கொள்வதற்குப் பதிலாக ஏனையவர்களை அநியாயமாகப் பழிசுமத்தும் தன்மையை மையப்படுத்தியதாக அமையும் விவாதங்கள் விமர்சன வகைப்பட்டவையல்ல. தம்மைத்தாமே விமர்சனத்திற்கு உட்படுத் தாமல் - தமக்குத் தரப்பட்ட பொறுப்புகளை - கடமைகளை நிறை வேற்றும் பணியில் சொந்த முயற்சிகள், பிரயாசைகள் என்பவற் றைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாமல் குருட்டுத்தனமாக அமைப் பின் பலவீனங்களில் பழி சுமத்தப் படுவதும் கூட சந்தர்ப்பவாதப் போக்கின் ஒரு சாயலே.

### விமர்சன சுதந்திரமும் சுதந்திர விமர்சனமும்

அடுத்ததாக ; விமர்சனத்திற்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தைத் துஷ்பிரயோகம் செய்யும் போக்கு அதீத ஜனநாயகத் தன்மையின் வெளிப்பாடே. கண்ட கண்ட இடங்களிலும், பொருத்தமற்ற நபர் கள் முன்னிலையிலும் மேற்கொள்ளப்படும் விமர்சனங்கள் அமைப்பிற்

www.tamilarangam.net



# யாவரும் கேளிரென

> ''சோசலிசத்தில் உதித்துள்ள விமர்சன வகைப்பட்ட'' போக்கு ஒரு புதுவகையான சந்தர்ப்பவாதம் தவிர வேறில்லை என்பதை வெறுமனே கண்ணை மூடிக்கொண்டாலொழிய காணுமல் இருக்க முடியாது. அணிந்துகொள்ளும் படாடோபமான பட்டப் பெயர்களை வைத்து மனிதர்களை எடைபோடாமல் ; அவர்களின் செய்கைகளை வைத்தும், யதார்த்தத்தில் பரிந்துரைக்கின்றவற்றை வைத்தும் எடை போடுவதனுல், ''விமர்சன சுதந்திரம்'' என்பதன் பொருள் சமூக ஜனநாயகத்தில் சந்தர்ப்பவாதத்திற்கு வேண்டிய சுதந்திரம் சோசலிசத்தில் முதலாளி வர்க்கக் கருத்துக்களையும் - நபர்களையும் புகுத்துவதற்கான சுதந்திரம் என்று தெளிவாகும்.
>
> **லெனின் - 'என்ன செய்ய வேண்டும்?' நூலிலிருந்து**

குள் தளம்பலான ஒரு சூழ் நிலையை ஏற்படுத்தும். அத்துடன் குழுவாதம் (Groupism) தோன்றவும் வழிவகுக்கும். இதுவும்கூட ஆரோக்கியமற்ற ஒரு விமர்சனமே.

எனவே, விமர்சனம் என்பது ஒன்றுபட்டுச் செயற்பட்டே தீர வேண்டும் என்பதை மையப்படுத்தி - அமைப்பின் - இலட்சியத்தின் நலன்களுக்கு முன்னுரிமை வழங்கி - பரஸ்பரமான புரிந்துணர்வை வளர்க்கும் ஒரு அம்சமாகப் பயன்படவேண்டும். நமது தவறுகளை மறைப்பதற்காக அல்லது ஏற்றுக்கொள்ள மறுப்பதற்காக ''பிழை பிடிக்கும்'' சுபாவத்துடன் விமர்சிப்பதனை தவிர்க்கும் அதே சமயம், சுயவிமர்சன மூலம் எமது தவறுகளைத் திருத்துவதோடு, நடைமுறையில் சுட்டிக்காட்டப்படும் தவறுகளை மனப்பூர்வமாக உணர்ந்து ஏற்றுத் திருத்த வேண்டியதும், திருத்திக்கொள்ள வேண்டியதும் ஒவ்வொருவருக்கும் உள்ள கடமையும், பொறுப்பும் ஆகும். அத்துடன் காலம், இடம், பொருள் ஏவல் என்னும் அம்சங்களை கவனத்திற்கு எடுத்துப் பொருத்தமான நேரத்தில் - பொருத்தமான இடத்தில்- பொருத்தமான சந்தர்ப்பத்தில் தான் விமர்சனம் செய்யப்படல் வேண்டுமே தவிர தேவையற்ற சந்தர்ப்பத்தில் - தேவையற்ற இடத்தில் அல்ல.


மேலும், தவறுகளே விடாமல் இருப்பதற்கு நாமனைவரும் உத்தம புத்திரர்கள் அல்ல. அதற்காகத் தவறுகளையே தொடர்ந்து செய்வது மனிதப் பண்புமல்ல. இதனை நன்கு உணர்ந்து கொண்டு நாமனைவரும் ஒன்றுபட்டே தீரவேண்டும் என்பதற்காக இயக்கத்தின் நடைமுறைக் குறிக்கோளை நிறைவேற்றுதற்கான உடன்பாடுகளைச் செய்து செய்துகொள்ள வேண்டும். இதற்கு நடைமுறையில் ஏற்படும் அபிப்பிராய பேதங்களையும், அணுகுமுறை மாறுபாடுகளையும் விமர்சனம் - சுயவிமர்சனம் என்ற அடிப்படையில் தீர்த்துக்கொள்ள வேண்டும். எனினும் அடிப்படைக் கொள்கைகள் கோட்பாடுகள் பற்றி எந்தவிதமான பேரத்திற்கும் இடமின்றி - தத்துவார்த்த வகைப்பட்டச் சலுகைகள் எதுவுமின்றி நடைமுறைக் குறிக்கோள்களை அடைவதற்கான உடன்பாடு செய்யப்பட்டாக வேண்டும். □

ஈழப்புரட்சி அமைப்பின் 'பொதுமை' இதழிலிருந்து

விமர்சன சுதந்திரமும் சுதந்திர விமர்சனமும்

www.tamilarangam.net





## வாயில்

# மிகப்பெரிய அறிவாளி என்ற களிப்பா உங்களுக்கு ?

### வெற்றிப் பயணம்

'பாலம்' கட்டியபின் அதன் மீதான தங்களின் முதல் பயணமே வெற்றிப் பயணமானது குறித்து மிக்க மகிழ்ச்சி.

ஆர் வைகுந்தமூர்த்தி,
மதுரை-14.

### மிகப் பெரிய அறிவாளி என்ற களிப்பா உங்களுக்கு?

தமிழ் நாட்டில் கல்வி அறிவு உள்ளவர்கள் 40% பேர்தான். இதில் 15%க்கும் குறைவான பேர்கள்தான் பத்திரிகை படிக்கிருர்கள். பொழுதுபோக்காக, மேலோட்டமாக படிப்பவர்களே இதில் அதிகம். இத்தகையச் சூழ்நிலையில் பிற்போக்குச் சக்திகள் எளிய நடையில் தங்களது கருத்துக்களை சொல்கிறார்கள். பிற்போக்கு கருத்துகள் மக்களை சென்றடைகிறது. இதுநாள் வரை இங்குள்ள முற்போக்குச் சக்திகள், முற்போக்குக் கருத்துக்களைக் கடினமான நடையில் சொல்லி வருகிறது. கடினமான நடையில் சொல்வதைதான் முற்போக்குத்தனம் என்று தவருக கணிக்கிருர்கள். முற்போக்கு இதழ்கள் செய்துவரும் அதே தவறை பிழையில்லாமல் "பாலம்" முதல் இதழ் செய்துவிட்டது. இப்பிழை தொடர்வது முட்டாள்தனம். பாலம் படிப்பவர்கள் அனைவரும் மிகப் பெரிய அறிவாளி என்ற களிப்பா உங்களுக்கு? இனி வரும் இதழ்கள் கண்டிப்பாக மிக எளிய நடைமுறையில் தான் இருக்க வேண்டும்.

ச. இ, கண்ணன்,
திருச்செந்தூர்.

### உலக அமைப்புப் பாலம்

தங்கள் 'பாலம்' போராளிகள் அனைவருக்கும் பாலமாகவும், தமிழினத்தார் அனைவருக்கும் பாலமாகவும், உலகமைப்புப் பாலமாகவும் திகழ்வதாகுக!

இரா. இளங்குமரன்,
மதுரை-6.

### புதிய வாசல்

விடுதலைப் போராளிகளாக மக்களே மாறும் கொதிநிலை ஆகா வென்று எழுந்தது பார் 'மலையக மக்கள் சக்தி' என்ற கட்டுரை ஈழ விடுதலையில் ஒரு புதிய வாசலை திறந்திருக்கிறது.

சந்திரன்,
சங்கரன் கோயில்.

### இரண்டுக்கு மேல்

இரண்டு கவிதைகளோடு ஏன் நிறுத்திக் கொண்டீர். இரண்டுக்கு மேல் எப்போதும் வேண்டாம் என்பது கவிதைகளுக்கு விதிக்கப்பட்டக் கட்டுப் இல்லை ஆசிரியரே.

சுமதி,
திருபுவனம்.

### நூலகம்

நூலகம், பகுதி தேவையான ஒரு பகுதி. ஆனல் புது புத்தகங்கள் பற்றிய அறிமுகமாக இருப்பது நல்லது.

சு. கோவிந்தன்,
கருப்பூர்.

### கவிஞர்களின் கவனத்திற்கு

'மரணத்துள் வாழ்வோம், எனும் கவிதை நூலுக்கு சேரன் எழுதிய முன்னுரையைத் தக்க சமயத்தில் பிரசுரித்தது மகிழ்ச்சிக்குரிய செய்தி. கவிதை பற்றி அம் முன்னுரை பல அம்சங்களை பரிசீலனை செய்கிறது. தமிழக கவிஞர்களின் புத்திக்குள் உரைக்க வேண்டிய விஷயங்கள் இவை.

என். நிர்மலா,
புதுக்கோட்டை.

### சிவகுமாரன் பகத்சிங்

விடுதலை இயக்கங்களின் விளம்பரப் போட்டிகளுக்கிடையே மறைந்து போன சிவகுமாரனைப் பற்றி அரவிந்தனின் கட்டுரை நெஞ்சைச் சுட்டது. சிவகுமாரன் பகத் சிங்கை ஞாபக மூட்டினன்.

எம். ஜீவா
மேட்டூர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குடிக்க நீரில்லை குடியிருக்க வீடில்லை

# காட்டுக்குள் வாழும் இலங்கை அகதிகளின்

# கண்ணீர்ப் பேட்டி

□ 'தாயகம் திரும்பியோர் ஐக்கிய முன்னணி சம்மேளனம்' (United Front Federation For Repatriates) என்று ஓர் அமைப்பு. கொஞ்சம் 'பெரிய பெயர்'தான். ஆர். எம். இராமச்சந்திரன் தலைவர். ஏ. என். அப்பாவுப் பொதுச் செயலாளர்.

□ இலங்கையிலிருந்து சிறிமா சாஸ்திரி ஒப்பந்த அடிப் படையில் தாயகம் திரும்பும் தமிழர்களை குடியமர்த்தும் பணியில் ஈடுபடுவது இதன் நோக்கம்.

□ தாயகம் திரும்பியோர் ஐக்கிய முன்னணிக்கு மேற்கு ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த Agro Action, Arbeirterwohl Fahrt என்ற இரண்டு சமூக சேவை நிறுவனங்கள் திட்டப்பணிகளுக்கு முதலீட்டு உதவிகளைச் செய்து வருகின்றன.

□ பிரிட்டனிலுள்ள Christian Aid என்ற நிறுவனமும் மற்றும் வெளிநாடுகளிலுள்ள பல்வேறு சமூக சேவை நிறுவனங்களும் உதவிகள் செய்து வருகின்றன.

□ மாநில மத்திய அரசுகளின் உதவிகளையும் பெற்றுக் கொள்கிறது.

□ மதுரையில் தலைமை அலுவலகம். கோத்தகிரி, குன்னூர், கீழ் கோத்தகிரி, பந்தலூர், கூடலூர், திருநெல்வேலி, புதுக் கோட்டை, திருச்சி, மண்டபம், வால்பாறை ஆகிய பத்து ஊர்களில் கிளை அலுவலகங்கள்.

□ பெயரும் அலுவலகங்கள் மட்டும் பெருத்து நீண்டிருக் கிறது. ஆனால் இவர்களால் தாயகம் திரும்பியோர் குடும்பத் தினர் படும் துயரம், துன்பமும், அவஸ்தையும் கரிய நெடிய இருளாய் கவ்வியுள்ளது.

□ தாயகம் திரும்பியோர் ஐக்கிய முன்னணி சம்மேளனம் தாயகம் திரும்பியோருக்காக பாப்பாகுடி, இடைக்கால், சேரன் குளம், வல்லநாடு, ஓடைமறிச்சான், பெருங்குடி, ஆகிய ஆறு ஊர்களிலும் குடி அமர்த்தி வேலைவாய்ப்புத் தந்துள்ளன. (?) இந்த ஆறு ஊர்களுக்கும் ஈழ நண்பர் கழகத்தைச் சேர்ந்த இரா. திரவியம், எம். இராஜேந்திரன், பொன். இளங்கவி, இரா. ஜெயம் ஜூலியஸ் ஆகியோர் நேரடியாகச் சென்று நிலைமை களைக் கண்டறிந்துள்ளனர்.

□ அகதிகள் மறுவாழ்வு, சமூக சேவை என்பது அரசு உதவி பெறவும், வெளிநாட்டுப் பணம் பெறவும் வழிசெய்யக் கூடிய 'வியாபார மூலதனமாக' மாறிப்போய் கொண்டிருப்பதை எப்படி பொறுப்பது? என்பதே ஈழ நண்பர் கழகத்தின் கேள்வி.

□ *பேட்டித் தொகுப்பு: இராசன்* □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





மாரியாயி, வள்ளியம்மாள், ஆராயி, : வல்லநாடு.

திருநெல்வேலி மாவட்டம் அம்பா சமுத்திரம் தாலுக்கா இடைகால் கிராமம். இங்கு தாயகம் திரும்பிய 36 குடும் பத்தினர் 'பட்டுப் பூச்சி வளர்ப் புத் திட்டத்தில்' ஈடுபடுத்தப் பட்டுள்ளனர் என்பது ஒரு செய்திதான். ஆனல் இடை காலிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தள்ளியிருக்கும் பனே யங்குறிச்சி பாரதிநகர்தான் உரிய இடமாகும்.

பசிய மல்பேரிச்செடி பச்சைக் கம்பளம் விரிக்க பட்டுப் பூச்சி ரீங்காரம் பாடும் என்று நினைத்து உற்சாகத்தோடு சென்ருேம். ஆனல் எங்கள் நினைப்பு பட்டமரமானது. பனேயங்குறிச்சி பட்டுவளர்ப்புத் திட்ட நிலங்கள் மேய்ச்சல் நிலமாக மாறி ஆடும் மாடும் படுத்துகிடந்தன.

குடியிருப்புகளிலும் மனித நட மாட்டம் இல்லே. விசா ரித்த போதுதான் தெரிந்தது தாயகம் திரும்பிய தமிழர்கள், கல்லுடைக்க துலுக்கப்பட் டிக்கு போயிருக்கிருர்கள் என்ற விஷயம்.

பனேயங்குறிச்சியிலிருந்து 3 கிலோ மீட்டர் தள்ளியிருக்கும் துலுக்கப்பட்டிச் சென்ருேம்.

துலுக்கப்பட்டி கல்வாரியில் கல்லுடைத்துக் கொண்டிருந்த ஆறுமுகம் சோம்பு ஆகியோர் கூறியதாவது :

வாக்குறுதி வாக்குறுதியாக வாரி வழங்கி எங்களே அழைத்து வந்தார்கள். ஆரம் பத்தில் எங்களுக்கு எந்த வேலேயும் கொடுக்கவில்லே. பசியும் பட்டினியும் எங்களே வாட்டியது. பின்னர் பட்டுப் பூச்சி வளர்க்கக் கற்றுக் கொடுத்தார்கள்.

பட்டுப்பூச்சி வளர்ப்பிற்காக 2.65 ஏக்கர் நிலம் (2.65 ஏக்கருக்கும் குறைவாகவே உள்ளது) தந்தார்கள்.

ஆனல் பட்டுப் பூச்சி வளர்ப் பிற்கும் பராமரிப்புக்கும் தேவையான வசதிகளேச் செய்யவில்லே.

பட்டுப்பூச்சி வளர்ப்பு நிலங் களேச் சுற்றி வேலி அமைத் துத் தரக்கேட்டோம். வேலி அமைத்துத் தரவில்லே. ஆடு மாடுகள் 'மல்பேரி' செடிகளில் நுழைந்து முற்றிலும் அழித்து விட்டன.

அரசும் சமூக நிறுவனங் களும் எங்களுக்காக பணஉதவி செய்கிறது ஒவ்வொரு வருக்கும் எவ்வளவு ஒதுக்கீடு செய்கிறது என்ற விபரங்கள் எங்களுக்குத் தெரியாது. ஐக் கிய முன்னணி அதிகாரிகள் வருவார்கள் அதில் கையெ ழுத்து போடு இதிலே கையெ ழுத்துபோடு என்று கையெழுத் துக்களே மட்டும் வாங்கிச் செல் வார்கள்.

வறுமையின் கொடுமை தாங்க முடியாமல் குடும்பத் தினர் நாகர்கோவில் குளத்து புழா வால்பாறை ஆகிய ஊர் களுக்கு வேலே தேடிச் சென் றுள்ளனர்.

நாள் முழுவதும் கல்லுடைத் தால் கூலி ரூ. 10.75 லிருந்து 15 வரை கிடைக்கும்.

எங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களுக்குப் பட்டா கூட வழங்கவில்லே.

கல்லுடைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த பெண்கள் பால போஜின், சிவமாலே, மரியம் மா, முனியம்மா ஆகியோர் ஒரே குரலில் கூறினர்கள். ''ஆசை காட்டி மோசம் செய்து விட்டார்கள். நாங்கள் கொண்டு வந்திருந்த நகை களேயும் விற்று சாப்பிட்டு விட் டோம் பசியோடும் பட்டினி யோடும் வெய்யலில் கல்லுடை த்து வேகின்ருேம்.''

இரத்தினபுரி மாவட்டம் ரக்கு வானபகுதியில் உள்ள எலட் டன் எஸ்டேட்டில் பணி புரிந்த செல்லத்துரை (வயது 51) என் பவர் கூறியதாவது.

''நான் ரக்குவான நகர் தொழிலாளர் காங்கிரசின் (தொண்டமான் கட்சி) தலே வராக இருந்தவன். 1983ல்-ல் U.F.F.R. தலேவர் இராமச் சந்திரன் மலேயகப் பகுதி களுக்கு வந்திருந்தார் - அப் போது எங்களேப் போன்றவர் களிடம் ஒப்பந்தப்படி நீங்கள்

www.tamilarangam.net



தைரியமாக இந்தியா வரலாம். உங்களைக் குடியமர்த்த எங்கள் அமைப்பு உதவிகள் செய்யும் என்று தெரிவித்தார். மேலும் 'வீரகேசரி' நாளிதழில் 199, மோதிரை வீதி, கொழும்பில் உள்ள U.F.F.R. அலுவலகத்திலிருந்து இந்தச் செய்தியை விளம்பரமாகவும் பிரசுரித்திருந்தார்கள். அதில் நபருக்கு மூன்று ஏக்கர் நிலம், வீடு தொழில் கருவிகள் முதலிய வாய்ப்பு வசதிகள் செய்து தரப்படும் என்று தெரிவித்திருந்தார்கள். வானொலியிலும் இந்த விளம்பரமாக ஒலி பரப்பப்பட்டது. இதைநம்பி நான் ராமச்சந்திரனை தொடர்பு கொள்ள முயன்றேன். அவரைச் சந்திக்க அப்போதே ரூ. 2000 செலவிட்டேன். இறுதியில் 'ஹட்டன்' என்ற இடத்தில் தொழிலாளர் காங்கிரஸ் அலுவலகத்தில் அவரைச் சந்தித்தேன். மீண்டும் ஏராளமான உறுதி மொழிகளை சொன்னார். அவரை நம்பி இங்கு வந்ததில் எங்களை இப்படி கொடுமைப் படுத்துகின்றார்கள். உண்ண உணவில்லை, உடுக்க உடையில்லை எங்களுக்கு மருத்துவ வசதியில்லை, எங்கள் பிள்ளைகள் படிக்க வசதியில்லை. எங்களைக் கவனிக்கவும் நாதியில்லை. U.F.F.R.ன் கொடுமைகளை தட்டிக் கேட்கவும் ஆளில்லை. சிங்களவன் எங்களை நடத்தியது கூடப் பரவாயில்லை அதைவிட மோசமாக இங்கே அனுபவித்து விட்டோம்.

□ □ □

துலுக்கப்பட்டியிலிருந்து 3 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது ஓடை பறிச்சான் கிராமம். இங்கு தாயகம் திரும்பியோர்க்காக சுமார் 15 வீடுகள் கட்டி வருகிறார்கள். 80 குடும்பங்களை குடி அமர்த்தும் திட்டம் இருப்பதாகவும் 160 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

□□□

துலுக்கப்பட்டியிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது காந்தி நகர். 35 குடும்பத்தினர் குடி அமர்த்தப்பட்டுள்ளனர். ரூ 4000 மதிப்பில் வீடுகள் கட்டிக் கொடுத்துள்ளனர்.

10 குடும்பத்தினர் தற்போது நாகர் கோவில், குளத்துப்புழா போன்ற இடங்களுக்கு வேலை தேடி சென்றுள்ளனர். சிலர் குழந்தைகளை மட்டும் தங்க வைத்துவிட்டு வயிற்றுப் பாட்டுக்காக வெளியூர்களுக்குச் சென்றுவிட்டனர். நாராயணன் ராஜம்மாள் என்ற தம்பதியினர். தம்முடைய மகள் அம்மா பொண்ணு என்ற 10 வயது சிறுமியின் பொறுப்பில் 2 குழந்தைகளை விட்டு விட்டு வேலைக்கு சென்று விட்டனர் என்றால் பாருங்களேன். அனாதரவான குழந்தைகள் தம் பெற்றோரின் அன்பிற்காகத் தவிப்பது கண்ணீரை வரவழைத்தது.


இரதினபுரி மாவட்டம் துலசல எஸ்டேட்டில் பணியாற்றிய சவேரியார் (வயது 47) சுப்பிரமணியம் (வயது 29) சப்பாணி(வயது 47)பெரியசாமி (பதுளை பகுதியில் நுறுகலையில் அடவந்த எஸ்டேட்டில் பணியாற்றியவர்) ஆகியோர் கூறியதாவது: முதல் $1\frac{1}{2}$ வருடம் அங்குள்ள நிலங்களில் U. F. F. R. நிர்வாகம் நெல், கேப்பை, கடலை, காய்கறி பயிரிட்டது. அப்போது எங்களுக்கு ஆண்களுக்கு ரூ 9 என்றும் பெண்களுக்கு ரூ 6-ம் கூலி தருவார்கள்.

அதையும் பல மாதங்கள் கழித்து தருவதும் தராமல் ஏமாற்றிய நிலையும் தான் கடந்த காலங்களில் செய்தார்கள்.

அதனால் வெளி இடங்களுக்கு கல்லுடைக்கும் பணிக்கும் செல்ல வேண்டியிருக்கிறது அதிலும் பல நாள்வேலை கிடைப்பதே இல்லை.

அதன் பிறகு பட்டுப் பூச்சி வளர்ப்பிற்கு பாப்பாக்குடி பஞ்சாயத்து யூனியனில் பயிற்சி கொடுத்தார்கள். முதலில் U. F. F. R. நிறுவனமே நேரடியாக தொழிலைச் செய்தார்கள். எங்களுக்கு கூலி மட்டும் வாரா வாரம் கொடுப்பார்கள்.

குடும்பத்திற்கு சுமார் கூலி ரூ. 100 கிடைக்கும். நோட்டில் ஒப்பமும் வாங்கிக் கொள்வார்கள். அதில் என்ன எழுதியிருக்



வல்லநாடு: அழிந்த குடிசைகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கும் என்று எங்களுக்குத் தெரியாது. இப்போது குடும்பத்திற்கு 65 சென்ட் நிலத்தை ஒதுக்கி 'மல்பேரி' பயிரிட்டு பட்டு வளர்க்கச் சொல்லியுள்ளனர். இப்படி ஒதுக்கிக் கொடுத்தது முதல் U.F.F.R. எங்களைக் கவனிக்க கூட வருவதில்லை.

சில நேரம் வருவார்கள் சுற்றிப் பார்த்து விட்டு போய் விடுவார்கள். அந்த 17 ஏக்கர் நிலத்தில் 4 கிணறு உள்ளது. தண்ணீர் சரியாகக் கிடையாது. எங்களுக்குத் தொழில் செய்ய உரிய வசதிகளைச் செய்து தர வில்லை.

பட்டுப் பூச்சி வளர்ப்புப் பயிற்சி நேரத்தில் எங்களுக்கு குடும்பத்துக்கு ரூ 200 சம்பளம் கொடுத்தார்கள். பட்டுப் புழு 100 முட்டை ரூ 60க்கு தென் காசியில் வாங்க வேண்டும். விற்பனை செய்யும் போது பட்டு நூல் கிலோ ரூ 30 முதல் ரூ 40 வரை விலை போகும்.

மொத்தத்தில் மாத வருமானம் ரூ 400 கிடைக்கவே பெரும் சிரமப்பட வேண்டியிருக்கும். அதிலும் 16 குடும்பத்திற்கு மட்டுமே பட்டுப் பூச்சி வளர்க்க உதவிகள் செய்யப் பட்டுள்ளன.

எனவே மீதிப்பேர் இந்த வருமானம் கூட கிடைக்க வழியில்லாமல் எஸ்டேட்களுக்கும் கல்லுடைக்கும் பணிக்கும் சென்று வருகின்றனர்கள். எங்கள் குறைகளைத் தெரிவிக்க எங்களை ஒன்றுகூட விடுவதில்லை.

சங்கம் அமைப்பதற்கு கூட உரிமையில்லை ஒருமுறை நாங்கள் ஒன்று கூடி கேட்டதினால் தான் இந்த 65 சென்ட் நிலத்தை ஒதுக்கீடாவது செய்தனர். ஆனால் எதற்கும் பட்டா தரவில்லை. நாங்கள் ஒன்று சேர்ந்தாலோ அல்லது இங்கிருந்து நிரந்தரமாக வெளியேறி விடுகின்றோம் என்று கேட்டாலோ எங்களை மிரட்டுகின்றனர்.

இங்குள்ள பெண்கள் ஜெயக்கொடி (வயது 30) பழனியம்மாள் (வயது 50) செல்லம்மாள் (வயது 50) ஆகியோர் கூறியதாவது :-

மண்டபத்தில் வந்து இறங்கியதும் இந்த நடுக்காட்டில் கொண்டு வந்து விட்டுவிட்டார்கள். U. F. F R. ஐ சேர்ந்தவர்கள் இப்ப நாங்க இருக்கிறோமா செத்தோமா என்றுகூட வந்து பாக்கறதில்லை.

எதுக்கெடுத்தாலும் கையெழுத்து மட்டும் வாங்கிக்கிருங்களே ஒழிய சோற்றுக்கூட வழி பண்ணல. எங்களை வச்சு அவுக பிழைப்பு நடத்திக்கிட்டிருக்காங்க. நாங்க இங்கே பட்டினி கிடந்து சாகிறோம். நகை, தட்டு முட்டுச் சாமான்கள் எல்லாம் விற்று தின்னாச்சு.

செய்த வேலைக்கு ஒழுங்கா கூலி கொடுக்கறதில்லே. குடிநீர் மருத்துவ வசதி எதுவும் கிடையாது. ஊரை விட்டே பல மைல் தள்ளி காட்டுக்குள் தங்கவைத்தனர். அப்படி இருந்தால்தான் U.F.F.R. செய்யும் அட்டூழியம் யாருக்கும் தெரியாது என்று நினைத்தார்கள் போலும். இப்போதுதான் பாப்பாகுடி பஞ்சாயத்து ஒன்றிய தலைவர் அமர்நாத் சேட் உதவியாலே குடிநீருக்காக 2 அடிக்கும் பம்பு கிடைச்சது.

□ □ □

வல்லநாடு. தாயகம் திரும்பியோருக்காக விவசாயத் திட்டம் அமைக்கப் பட்டிருக்கும் ஊர். வழக்கம் போல் வல்ல நாடு என்ற குறிப்பிட்ட ஊரில் இந்த திட்டப் பகுதி இல்லை. வல்ல நாட்டிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரம் உள்ள மலை காட்டுப் பகுதியான 'ஆச்சிக் காடு' எனும் பகுதியில் உள்ளது. இடத்தைக் கண்டு பிடிப்பதே பெரும்பாடு என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். பாவப்பட்ட ஜனங்களை உலகின் கண்களிலிருந்து எவ்வளவு தூரம் தள்ளிவைக்க முடியுமோ அவ்வளவு தூரத்துக்கு அதிகமாகவும் தள்ளி வைக்கக் கூடியவர்கள் ஐக்கிய முன்னணி சம்மேளனத்தின் சாம்ராட்டுகள்.

இந்த விவசாயத் திட்டத்தைப் பற்றி U.F.F.R. நிறுவனத்தாரிடம் விசாரித்துப் பார்த்ததில் இந்த திட்டமே செயல்பட வில்லை என்று சோற்றில் முழுப் பூசணிக்காயை மறைத்தார்கள்.

இவர்களின் தகவல்களையும் மீறி, காட்டுத் தடைகளையும் மீறி ஆச்சிக்காடு சென்றோம்.

80 குடும்பங்களை குடியமர்த்தத் திட்ட முள்ளது.

1983 ஆம் ஆண்டே 16 குடும்பத்தினர் இந்தக் காட்டில் குடியேற்றப் பட்டனர். U.F.F.R. கட்டிக் கொடுத்த வீடு காற்றில் பறந்து போய் விட்டதால் U. F. F. R. அலுவலகத்தை ஒட்டிய பகுதியில் சிறு சிறு கீற்றுக் கொட்டகைகளாக நெருக்கி, நெருக்கி குடிசைகள் 15 கட்டிக் கொடுத்துள்ளனர். இந்தக் கீற்றுக் குடில்கள் என்று பறப்போம் என்று ஆடி நிற்கிறது.

குருசாமி, சுப்பையா ஆகியோர் கூறியதாவது : கூட்டி வரும் போது கொடுத்த வாக்குறுதிப்படி எங்களை நடத்தவில்லை. நிலம் தரவில்லை. வீடு ஒரு வருடமாக கட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

வல்ல நாட்டில் நிறைய தரமான செங்கல் சூளைகள் உள்ளன. ஆனால் அங்கெல்லாம் செங்கல் வாங்காமல் இந்த நிலத்து மண்ணிலே செங்கல் செய்து, அந்த மண்ணைக் குழைத்தே மண் வீடு கட்டி பாதியில் நின்று கொண்டிருக்கின்றது.

அடுத்த இதழில் முடியும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிலவரிகளில் செய்திகள்

ஜுலை 15: திருகோணமலை மூதூர் பகுதியில் மணல்சேனை அகதிகள் முகாமிற்கு அதி காலை நேரத்தில் சென்றனர் கறுப்புச் சீருடை அணிந்த இராணுவத்தினர். தமிழர்களைச் சுட்டுக்கொள்வதற்காகவே அகதிகள் முகாமுக்கு இராணுவத்தினர் தீ வைத்தனர். வெளியே ஓடிவந்த தமிழர்களை, பெண்கள், குழந்தைகள் எனக்கூடப் பார்க்காது ராணுவத்தினர் சுட்டுக்கொன்றனர். இவ்வாறு மல்லிகைத்தீவு, மணல்சேனை கட்டைப்பறிச்சான் ஆகிய கிராமங்களில் மட்டும் 155 தமிழர்கள் ராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜுலை 16: மன்னார் வவுனியா இடையே வியா முனன்று (16-7-86) மாலை தனியார் வாகனம் ஒன்றில் பயணம் செய்த 17 தமிழர்களை வெளியே இழுத்துப்போட்டு இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர்.

ஜுலை 24: இலங்கை இராணுவ வெறியாட்டத்தின் காரணமாக அகதிகளாக்கப்பட்டத் தமிழர்கள் 1.25 லட்சம் பேர் இதுவரை இந்தியாவிற்கு வந்துள்ளனர். இவர்களுக்கு இந்தியாவின் மத்திய அரசும் தமிழக அரசும் 8 கோடி ரூபாயை செலவழித்துள்ளன. இந்தத் தகவல்களை தமிழக நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

ஜுலை 24: இலங்கை மட்டக்களப்பு மாவட்டத்தில் தேடுதல் என்ற பெயரில் கடந்த இருநாட்களில் மட்டும் 200 தமிழர்களை ராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

ஜுலை 26: 'பிளாட்' எனப்படும் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் இரண்டாகப் பிரிந்தது.

கட்சியின் கூட்டுத் தலைமைக்கு எதிராக தனிநபர் ஆதிக்கம், தமக்குச் சாதகமான கொலை, கொள்ளை, கழகத்தைச் சேர்ந்த வர்களையே கொன்றது, கழகத்துக்கு எதிராக உளவுப்படை அமைத்தது, போதைப் பொருட்களைக் கடத்தியது, இயக்கத்தின் கணக்கு வழக்குகளை முறையாக வைக்காதிருந்தது என பல்வேறு குற்றச்சாட்டுகளை முகுந்தன் மீது சுமத்தியுள்ளனர்.

'பிளாட்' அடிப்படைக் கோட்பாடுகளுக்கு எதிராக இயக்க இளைஞர்களை செயற்படாமல் முடக்கி வைத்திருந்தார், இது திட்டமிட்டு முகுந்தன் நடத்திய சதியோ என்றும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

உமாமகேசுவரன் என இயற்பெயர் கொண்ட முகுந்தனை எதிர்க்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் ஈழத்தேசிய விடுதலை முன்னணியில் இணைவது தொடர்பாக அடுத்த மாநாட்டில் முடிவெடுப்போம் என்று கூறினார்கள்.

ஜுலை 26: நமது நெஞ்சங்களில் ஆறுத இரத்த காயமாய் இன்றும் நின்று நிலைத்திருப்பது 1983 ஜுலைக் கலவரம், வெலிக்கடை சிறைப்படுகொலை, ஆயிரக்கணக்கான தமிழர்கள் உயிர் இழப்பு.

இந்த இரத்த ஜுலையின் நினைவுநாள் மௌன ஊர்வலத்தையும் பொதுக்கூட்டத்தையும், ஈழ அகதிகள் முன்னணியும் ஈழ நண்பர் கழகம் பல ஊர்களில் நடத்தின.

நாகப்பட்டினம், தூத்துக்குடி, திருநெல்வேலி, திண்டுக்கல், நத்தம் ஆகிய ஊர்களில் பொதுக் கூட்டங்களும் ஊர்வலமும் நடைபெற்றன.

இராஜபாளையம், மேலூர், ஒத்தகடை ஆகிய ஊர்களில் பொதுக்கூட்டங்கள் மட்டும் நடைபெற்றன.

இராஜபாளையத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஈழப்புரட்சி அமைப்பின் நிறுவனர் தோழர் இரத்னசபாபதி பங்கேற்றார்.

நத்தம், மேலூர், ஒத்தகடை ஆகிய ஊர்களில் ஈழப்புரட்சி அமைப்பைச் சேர்ந்த தோழர் சுந்தர் பங்கேற்றார்.

நாகப்பட்டினத்தில் ஈழப்புரட்சி அமைப்பைச் சேர்ந்த தோழர் அ. லிங்கம் பங்கேற்றார்.

ஜுலை 28: தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கொழும்புப் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ள வருமாறு ஈழத்தேசிய முன்னணிக்கு அழைப்பு விடுத்திருந்தனர். இந்த அழைப்பை ஈழத்தேசிய விடுதலை முன்னணி நிராகரித்து விட்டது.

பேச்சு நடத்துவதன் மூலம் பயன் ஏதும் ஏற்படாது என்பதால் அழைப்பை E.N.L.F. நிராகரித்தது என முன்னணி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜுலை 31: இலங்கை வவுனியாவில் இலங்கை இராணுவம் ஹெலிகாப்டர் மூலம் தாக்குதல் நடத்தியதில் 30 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் இரா. திரவியம், 12, முதல் பிரதான சாலை, நேரு நகர், சென்னை-20
அச்சிடுபவர்: ஜே. ரமணி, பிளேஸ் பிரிண்டர்ஸ், அடையாறு, சென்னை-20

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எரிந்து கொண்டிருக்கும் நேரம்

சேரன்



இன்று வாய்திறவாதே
மௌனம் கொள்:

இன்று மட்டும்
நம் வாயிலிருந்து வருகிற
ஒவ்வொரு உண்மைக்கும்
ஒவ்வொரு துப்பாக்கிக் குண்டு
பரிசாகக் கிடைக்கிற
காலம் ஒன்று வருமோ?

அல்ல எனில் ஏனிந்த அவலம்?
முச்சந்தி மாமரத்தின் கீழ்
எரிந்தன உடல்கள்;
எழுந்த சுவாலைகளில்
கருகின குருத்துக்கள்.

புகை;
அச்சம்; கொடுமை
துயரம்; பீதி;
அனைத்துமே கறுப்பு.

அசுர நிறம்
துர்க்குறிகள் விரவி
இருளின் நிழல்கள் கவிய
உடல்களும் மனமும்
எரிந்து கொண்டிருக்கும்
இந்நேரம் —
குரல் ஒடுங்கிப்
பாடல் இழந்தன குயில்கள்.
மிரட்சி தெறித்த
விழிகள் நகர்த்தி
அலற மறந்தனர் சிறுவர்

சாம்பலைக்
காற்றுக் கொண்டு போயிற்று.

எலும்புகளை
நாய் கொண்டு போயிற்று

மனிதத்தை
துப்பாக்கி முனையில்
நடத்திச் சென்று
புதைகுழி விளிம்பில்
வைத்துச் சுட்டுப்
புறங்காலால்
மண்ணைத் தள்ளி
மூடிவிட்டு வந்து,
தெருவோரச் சுவரில்
குருதியால் வரைந்து
நியாயம் சொல்கிறார்கள்.
நியாயம்!

யார் கேட்டார் உம்மிடத்தில்
நியாயத்தை?

எச்சிறு புல்லும்
எச்சிறு தளிரும்
எச்சிறு புள்ளும்
நம்பிக்கைகளின்
உயிர்மூச்சுடனேயே
மலரும்;
வளரும்; முதிரும்;
மடியும்
என நான் அறிவேன்.

எனினும்
சாபங்கள் சூழ்ந்த
தாய்நாடு எமதெனத்
துயரில் புலம்பும்
முதியோர் சிலருக்கு
இக்கணம்,
உடல்களும் மனமும்
எரிந்து கொண்டிருக்கும்
இக்கணம்
நம்பிக்கையை
எப்படி உரைப்பேன்?

புதை குழிகளுக்கிடையில்
பிணங்களுக்கிடையில்
குருதி படிந்த
உடைகளுக்கிடையில்
புத்திர சோகத்தில்
நெஞ்சு பிளந்த
அன்னையர் கண்ணீர்த்
துளிகளுக்கிடையில்
'துர்ப்பாக்கியம்
தற்காலிகமானது
என்று குரலெழுப்ப
மெலிந்த உடலும்
வளர்ந்த தாடியும்
உடைந்த மனமும்
குழம்பிய தலையுமாய்
வார்த்தைகளுக்கு அலைகிறேன்
நான்.

□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்